விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 ஆவணி 18 ஜூல்கஜ் 6 இதழ் 201
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 3-9-84

### தமிழர் பிரச்னைபற்றிய சர்வகட்சி மாநாடு

## 21-ல் கூடும்போது அரசு யோசனை சமர்ப்பிக்கப்படும்

(கொழும்பு)

சர்வகட்சி மாநாடு மீண்டும் இம்மாதம் 21-ம் திகதி கூடும் போது, இலங்கையின் இனப் பிரச்னையைத் தீர்ப்பதற்கான அரசாங்கத்தின் இறுதி ஆலோசனைகள் சமர்ப்பிக்கப்படும் என்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இத்தகவலை நேற்றைய மாநாட்டின் இறுதியில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பேசுகையில் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி தெரிவித்தார்.

நேற்றைய மாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழரசுக்கட்சி மற்றும் இந்து ஸ்தாபனங்கள் இனப் பிரச்னையைத் தீர்ப்பது தொடர்பாகத் தமது கருத்துக்களை வெளியிட்டன.

இக்கருத்துக்கள் யாவும் கவனத்தில் எடுக்கப்படும் என்றும், இதன் அடிப்படையிலமைந்த அரசாங்கத்தின் ஆலோசனைகள் மாநாடு மீண்டும் 21-ம் திகதி கூட்டப்படும் போது சமர்ப்பிக்கப்படும் என்றும் இந்த ஆலோசனைகள் குறித்து மாநாட்டில் கலந்துகொள்ளும் குழுக்களின் கருத்துக்கள் அறியப்படும்

(8-ம் பக்கம் பார்க்க)

# திக்கம் சம்பவம்: 6 அதிரடிபடை வீரர்கள் பலி!

# பல வீடுகள். கடைகள் எரிப்பு!!

## பொதுமக்கள் பலியானதாக அரசுக்கு 'அமிர்' அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**திக்கத்தில் நேற்று முன்தினம் நிகழ்ந்த குண்டு வெடிப்புச் சம்பவத்தில், 'ட்ரக்' ஒன்று தூக்கி வீசப்பட்டதுடன், ஆறு அதிரடிப் படைவீரர்கள் பலியானார்கள். இச்சம்பவத்தில் மற்றும் பத்து அதிரடிப்படை வீரர்கள் காயமடைந்தனர். இவர்களில் மூவரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளது என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

காயமடைந்தவர்கள் உடனடியான இரண்டு பஸ்களில் யாழ். அரசினர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டு அவசர சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினமிரவு காயமடைந்தவர்கள் வாகனங்கள் மூலம் பலாலிக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து காயமடைந்தவர்களும், பலியானவர்களும் விசேட விமானம் மூலம் கொழும்பு கொண்டு செல்லப்பட்டனர்.

பொலிஸ் அதிரடிப் படையினர் ஒரு 'ட்ரக்'கிலும் இரண்டு ஜீப் வண்டிகளிலும் யாழ்ப்பணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது திக்கம் என்ற இடத்திலுள்ள சுடலைக் கருகாமையில் உள்ள வீதியில் புதைக்கப்பட்டிருந்த வெடி குண்டு வெடித்தது என்றும், 'ட்ரக' தூக்கிவீசப்பட்டதென்றும் பின்னால் வந்த இரு ஜீப்பிலும் வந்த அதிரடிப் பொலிசார் கீழே இறங்கிப் பரவலாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் உத்தியோக பூர்வமாகத் தெரிவிக்கப்பட்டது.

### ஹாட்லிக் கல்லூரி

இச்சம்பவததைத் தொடர்ந்து பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் மூன்று பிரதான கட்டிடங்களும், இரசாயன ஆய்வுகூடமும், நூல்நிலையமும் எரிக்கப்பட்டன

இதுதவிர கூ.மொ.வி ஸ்தாபனக் கிளையும் அங்குள்ள பல கடைகளும், வீடுகளும் எரிக்கப்பட்டுள்ளன. இதனால் பலர் வீடிழந்துள்ளனர். அங்கு இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் பொதுமக்கள் பலரும் பலியாகியுள்ளனர். பலநூற்றுக் கணக்கானவர்கள் பாதுகாப்பான இடத்துக்கு ஓடிவிட்ட

(8-ம் பக்கம் பார்க்க)

## 18 பேர் பலியானதாக 'அமிர்' தகவல்

(கொழும்பு)

பருத்தித்துறையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவங்களில் பொதுமக்களில் பதினெட்டுப் பேர் பலியானார்கள் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளார்.

ஆயினும் இச்சம்பவத்தில் 6க்கும் 10க்கும் இடைப்பட்ட எண்ணிக்கையில்தான் பொதுமக்கள் இறந்துள்ளனர் என்று தகவல் கிடைத்திருப்பதாகத் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

(8ம் பக்கம் பார்க்க)

## சட்டத்தரணிகள் பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நீதிவான் நீதிமன்றச் சட்டத்தரணிகள் இன்று நீதிமன்றத்தைப் பகிஷ்கரிக்கத் தீர்மானித்துள்ளதாக அறியப்படுகிறது.

வடபகுதியில் நடந்த சம்பவங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இப்பகிஷ்கரிப்பில் அவர்கள் ஈடுபடுகிறார்கள் எனக் கூறப்படுகிறது.

இந்தப் பகிஷ்கரிப்பைத் தொடருவதா என்பது பற்றி இன்று முடிவு செய்வார்கள்.

பல்லாகம் நீதிமன்றத்தை

[8-ம் பக்கம் பார்க்க]

## 'அமிர்' கூற்றுக்குறித்து 'றெனி' எழுப்பிய சந்தேகம்

(வென்னப்புவ)

"இலங்கையின் அபிவிருத்தி திட்டங்களுக்கு வெளிநாடுகள் நிதி உதவி அளிக்கக் கூடாது என்று தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அமிர்தலிங்கம் அந்தநாடுகளைக் கேட்டுள்ளதாக அறிக்கையொன்றில் கூறப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை உண்மையானால் திரு. அமிர்தலிங்கம் இலங்கையின் வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ள ஒரு பிரஜையா? அல்லது இலங்கையை ஒழித்

(8ம் பக்கம் பார்க்)

## பதற்றம் நீடிக்கிறது

(யாழ்ப்பாணம்)

திக்கத்தில் நிகழ்ந்த குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து, பருத்தித்துறைப் பகுதியில் உருவான பதட்ட நிலையின் போது பலர் துப்பாக்கிச் சூட்டுக்கு பலியானார்கள்.

சடாச்சரம், காப்டன் மோகனதாஸ், முத்துக்குமாரு யப்பான் என அழைக்கப்படும் ஒருவர் உட்பட பலர் பலியானதாகத் தெரிவிக்கப்பட்டது.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் போது பலர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் புலோலியைச் சேர்ந்த 48 வயதான முத்துக்குமாரு, பருத்தித்துறையை சேர்ந்த 46 வயதான துரை ஆகியோர் மந்

[8-ம் பக்கம் பார்க்க]

## பாதிக்கப்பட்ட இடங்களை அரச அதிபர் பார்வையிட்டார்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறைக்கு நேற்றுச் சென்ற யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிட்டதுடன், பாதிக்கப்பட்டவர்களையும் சந்தித்தார்,

அரசாங்க அதிபருடன் யாழ் மாவட்ட அமைச்சின் இணைப்பதிகாரியும் உதவி அரசாங்க அதிபருமான திரு. எஸ். பி. பாலசிங்கமும் சென்றிருந்தார்

பருத்தித்துறையல் துப்பாக்கிச் சூட்டிற்கு பலியான காப்டன் மோகனதாஸின் இறுதியாத்திரையிலும் இவர்கள் கலந்து கொண்டனர்.

மந்திகை ஆஸ்பத்திரிக்குச் சென்று காயமடைநதவர்கள்

[8 ம் பக்கம் பார்க்க]

## ஜீப் கடத்தப்பட்டது

[யாழ்ப்பாணம்]

யாழ். நகரில் நேற்றுக் காலை 'மாக்பெட்' ஸ்தாபனத்திற்கு உரிய 'ஜீப்' ஒன்று கடத்தப்பட்டது.

கஸ்தூரியார் வீதி எரிபொருள் நிலையத்தில் 'ஜீப்' வண்டிக்கு டீசல் அடித்துக் கொண்டிருந்தபோது இச்சம்பவம் நடந்தது.

சாரதி வெளியில்நின்று டீசல் அடித்துக்கொண்டிருந்தசமயம் இரு இளைஞர்கள்வந்து திடீரென ஜீப்பைக் கடத்திச் சென்றதாகக் கூறப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாகப் பொலிஸில் புகார்செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினமும் யாழ். பெரியகடைப்பகுதியில் திணைக்களமொன்றுக்குச் சொந்த

[8-ம் பக்கம் பார்க்க]

## விமானக் கடத்தல்காரர்கள் இந்தியாவிடம் ஒப்படைப்பு?

(டுபாய்)

இந்தியாவுக்குச் சொந்தமான 'போயிங்-737' விமானத்தை கடந்த மாதம் 25ம் திகதி டுபாய்க்குக் கடத்திச் சென்ற கடத்தல்காரர்களை இந்தியாவிடம் ஒப்படைப்பதற்கு ஐக்கிய அரசு ராஜ்யங்களின் அரசாங்கம் தீர்மானித்துள்ளது

இச்செய்தியை டுபாயிலிருந்து வெளியாகும் அரசாங்கச் செய்தி ஏடு ஒன்று நேற்று வெளியிட்டிருந்தது.

## விடுதலையான 23 இளைஞர்கள் யாழ். வந்தனர்

[யாழ்ப்பாணம்]

வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற சம்பவங்களைத் தொடர்ந்து கைதுசெய்யப்பட்டு காலி பூசா இராணுவ முகாமில் தடுத்துவைக்கபபட்டிருந்த இளைஞர்களில் மேலும் 23 பேர் விடுதலைசெய்யப்பட்டு நேற்று நண்பகல் 'யாழ் தேவி' மூலம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர். (க)

## ராணுவவீரர்களுக்கு பணிப்பு

(கொழும்பு)

மன்னாரில் அண்மையில் நடைபெற்ற வன்செயல்களின் போது சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் 33 இராணுவ வீரர்களை முகாம்களை விட்டு வெளியேறவேண்டாம் எனப் பணிக்கப்பட்டுள்ளது" என்று தேசிய பந்தோபஸ் அமைச்சர் திரு லலித் அதுலத் முதலி செய்தியாள மாநாட்டில் தெரிவித்துளார்.

மன்னார் சம்பவம் தொடர்பாக விசாரணை நடைபெறு

(8ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கண்டி ரோட் அரியாலையில் பொன்னம்பலம் வீதிச்சந்திக்கு அருகில் தென்னை, பனைகளுடன் 5 பரப்புக் காணி விற்பனைக் குண்டு. தொடர்பு: ஆ.கெலன் இல: 1, கதிர்றல் வீதி, யாழ்ப் பாணம். 1524

நாவலர் வீதியில் $1\frac{1}{2}$ பரப் புடன் கொண்ட வீடு விற்ப னைக்குண்டு. தொடர்பு: விளம் பர இல 1569 C/O ஈழநாடு. 1569

மாதகலில் இருந்து பெரிய விளானுக்குச்செல்லும் வீதியில் ஏழு பரப்புக் காணி உடன்விற் பனைக்குண்டு. தொடர்பு; கே. துரைராசா, முருகன்கோவிலடி பெரியவிளான். 1502

கொடிகாமம், கண்டிவீதியில் (பிரசவ ஆஸ்பத்திரி வீதி) 24 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: கந் தையா, சிவநேச கபே, கொடி காமம் 1513.

ஒரு மொறிஸ் மைனர் கார் நம்பர் EN 1051 நல்ல நிலை யில் தினப் பாவிப்பிலுள்ளது. விற்பனைக்குண்டு. அரசரத் தினம், கந்தனருள், 54 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி 23175 1560

நன்கு சீவுளி போட்ட பழைய பனை மரங்கள் கதவு, நிலை, யன்னல்கள் 6×4' தீராந் திகள் விற்பனைக்குண்டு. விப ரங்களுக்கு க.சிவா No 9 மாட் டின் லேன் யாழ்ப்பாணம். 1579

கோப்பாய்க் கிறிஸ்தவக் கல் லூரிக்கு அண்மையில் பருத் தித்துறை வீதியில் 2பரப்புக் காணியுடன் சகல வசதியும் கொண்ட வீடு விற்பனைக் குண்டு. தொடர்பு: தனம் தர்மலிங்கம், கோப்பாய் தெற்கு, கோப்பாய். 15 6

எண்சோதிடர் ''அன்புஜி'' அவர்கள் எழுதிய அதிஷ்ட எண்சோதிடம். இலங்கையில் இதுவரை வெளிவந்த எண் சோதிடப் புத்தகங்கள் அனைத் திலும்பார்க்க, குறுகிய காலத் தில் அதிக விற்பனையுடன் மிகச் சிறந்த புத்தகம் எனப் படித் தவர்கள் பலரின் பாராட்டுக் களுடன் யாழ்நகர் எங்கும் விற்பனையாகி றது. 1577

பன்னிரண்டு மரக்கடைச் சல் இயந்திரங்கள் மோட்டார் களுடன் விற்பனைக்குண்டு. 9-ந் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை ஒன்பது மணிக்கும் பதி னொரு மணிக்குமிடையில் பார்வையிட்டு விலைபேசலாம். அரஸ்கோ இன்டஸ்றீஸ், 163 கண்டி வீதி, யாழ்ப்பாணம். ரெலிபோன் 23175 1558

புழுங்கல் காயவைக்கவும் மீனை கருவாடு ஆக்கவும் உகந்த Tea Drier காய்ச்சும் இயந்திரம், Disintergrator அல் லது கட்டர் என்று சொல் லப்படும் இயந்திரம் கருவாட் டைக் கோழித்தீனுகவும் கொப் பருவை சிறு துண்டங்களாக வும் ஆக்க உகந்தது. இரண்டு எண்ணெய் ஊற்றும் இயந்தி ரங்கள் Oil Mill ஆகியன விற் பனைக்குண்டு. தேவையானோர் எம்முடன் தொடர்பு கொள் ளவும். அரசரத்தினம் கந்த னருள் 54, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ரெலிபோன் 23175 1559

## விற்பனைக்கு

LD 2 ஒஸ்ரின் லொறிபொடி யுடன் நல்ல நிலையில் தினப் பாவிப்பிலுள்ளது. ஒஸ்றின் மொறிஸ் மூடியபொடி வான் இங்கிலாந்திலிருந்து இறக்கு மதி செய்யப்பட்டது நல்ல நிலையிலுண்டு. தினமும் மாலை 4-00 மணி முதல் 6-00 மணி வரையும் பார்வையிடலாம். 9-ந் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை ஒன்பது மணிக்கும் பதி னொரு மணிக்குமிடையில் செலுத்திப் பார்த்து விலை கேட்கலாம். கூடிய விலைகேட் பவருக்குக் கொடுக்கப்படும். அரஸ்கோ இன்டஸ்றீஸ் 163, கண்டி வீதி, யாழ்ப்பாணம். ரெலிபோன் 23175 1557

## தவறிவிட்டது

திறப்புக்கோர்வை ஒன்று யாழ்/கன்னியாஸ்திரி மடபாட சாலையின் வாசலடியில் அல்லது திறந்தவெளியரங்கு வடக்குப் பக்க வீதியில் தவறிவிட்டது, கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் விலா சத்தில் ஒப்படைக்க வும். தகுந்த சன்மானம் வழங்கப் படும். ம. வை. வீரசிங்கம், சேகரம் அன் சன்ஸ், 74,[198] ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பா ணம். போன் 22693 1549

## ஒத்துமாறல்

பௌதீகவிஞ்ஞானப் பட்டப் படிப்பிற்கு பேராதனைப் பல் கலைக்கழகத்திற்கு தெரிவு செய் யப்பட்ட நான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு ஒத்து மாறவிரும்புகிறேன். மா.பஞ் சாட்சரமூர்த்தி இலகடி, அல் வாய் தெற்கு அல்வாய் 155J

## வகுப்புகள்

I. C. M. A Section A, B and P I Lectures on past Papers and Suggested Questions and Answers for Nov Exam Business Law Financial Accounting Economics Analysis Organisation of Production Cost Accounting Lecturers Mr. A Kailayapillai. Mr. S Sivapalan. 11-ம் வகுப்பு மாணவர்களுக்கு விசேட கொம்புயூட்டர் செய்கை முறை வகுப்புகள் பள்ளிக்கூடங்களில் பாவிக்கப் படும் Sinclair ZX Spectrum கொம்புயூட்டர்மூலம்10.9.84ல் ஆரம்பிக்கப்படும். Radhakrishnas's Polytechnic, Kailasapillayar Kovelady, 392, Navalar Road, Nallur Jaffna. 1575

## Glasgow Nelliady

A/L 85 AUGUST
(One year course)
**ஆரம்பம்: 3-9-84 திங்கள் மாலை 2-30 மணி**

ஆசிரியர்கள்:
இரசாயனம் - சண்;
பௌதிகம் - வர்ணன்
தூயபிரயோக கணிதம் - வெக்ரர்;
விலங்கியல் - சிவபாதம்;
தாவரவியல் - பாலா
1548

## WANTED

Wanted Tennant/Caretaker single or married with 4 A/L passes minimum for old house and property $4\frac{1}{2}$ miles from Jaffna town. Apply with full particulars in confidence. S. Nagalingam, Kreston M.N.S. and Co., 42, K.K.S. Road, Jaffna. 1486

## ஆழிக்குமரன் அந்தியேட்டி

ஆங்கிலக் கால்வாயில் வீரமரணமெய்திய ஆழிக் குமரன் ஆனந்தனின் அந்தியேட்டிக் கிரியைகள் 5-9-84 புதன்கிழமை காலை வல்வெட்டித்துறை யில்உள்ள அவரது தாயா ரின் இல்லத்தில் நடை பெறும்போதுஉற்ருர்,உற வினர், நண்பர்கள், ஆதர வாளர்களை கலந்து அவர் ஆத்மசாந்திக்குப் பிரார் த்திக்குப் படி வேண்டுகின் ரேும்.

-தாயார், சகோதரர்கள், மனைவி - மக்கள். (1585)

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.உ.)

## பகிரங்க ஏலவிற்பனை

சங்க பென்ஸ் 911, இசுசு, மொறிஸ் நோமல் லொறி களில் இருந்துகழட்டிய பழைய உதிரிப்பாகங்கள், மின் தறி யாலையில் நூல் சுற்றி வந்த வெற்றுக் கோண்கள் பகிரங்க ஏல விற்பனை மூலம் 8-9-84 சனிக்கிழமை மு. ப 10-00 மணிக்கு சங்கத்தில் வைத்து விற்கப்படும். மேற்படிபொருட் களை பார்வையிட விரும்பு வோர் காரியாலய நேரத்தில் பார்வையிடலாம்.

**பொதுமுகாமையாளர்**
சங்கானை.
1-9-84 1578

## யாழ்ப்பாண அக்கடமி

### க. பொ. த. உயர்தர பரீட்சை ஆகஸ்ட் 1985 மீட்டல் வகுப்புகள்

க. பொ. த. உயர்தர பரீட் சைக்கு ஒருமுறையாவது தோற்றிய எவரும் இந்த மீட் டல் வகுப்புகளில் சேரலாம். பாடத்திட்டம் முற்றுக மீட் டல் செய்யப்படும்.

சேர விரும்புவோர் அக் கடமி காரியாலயத்தில் உள்ள விண்ணப்பப் படிவங்களில் விண்ணப்பிக்கவும்.

வகுப்புகள் 3 9 - 84-ல் ஆரம்பமாகின்றன.

84/85-ம் ஆண்டு பல்கலைக் கழக அனுமதிக்கு எமக்கூடாக பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 65 மாணவர் களுக்கு மேலாக மருத்துவம், பல்லறுவை மருத்துவம், விலங்கு மருத்துவ விஞ்ஞா னம், விவசாயம், உயிரியல் விஞ்ஞானம், எந்திரவியல், பௌதிக விஞ்ஞானம், சட் டம் ஆகிய பீடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார் கள். இது எமது திறமைக்குச் சான்றுகும்

அதிபர்.
தொலைபேசி எண். 22617
376, பிரதான வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். 1283

## ரி. வி. தேவை

பாவித்த நல்ல நிலையிலுள்ள கலர் 20'' அல்லது மேற்பட்டது, கடைசி விலையை மறு விபரங்களுடன் எழுதவும்.

விளம்பர இல. 1573, C/o ஈழநாடு, (1573)

வருடமொன்றுக்கு உங்கள் மூலதனத்திற்கு
**27%** தொடக்கம் **30%** வரை
வட்டி பெற்றுக்கொள்ளுங்கள்.
குறைந்த தொகை ரூபாய் ஆயிரம் (1,000/-)
எந்நேரமும் அறிவித்தலின் பின்
பணத்தைத் திருப்பிப் பெறலாம்.
விபரங்களுக்கு:
JAFFNA PROPERTY TRADES LTD.
3, நவீன சந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம்.
போன்: 23698

## காணவில்லை



எனது மகன் முகமது றசீம் வீட்டைவிட்டு வெளிக்கிட்டு 9 நாட்களா கிறது. சிறு நரம்புப் பெல யீனம் உடையவர். வயது 18. $4\frac{1}{2}$' உயரம். சிவப்பு நிறம், பொலிஸ் குரூப் அடித்துள்ளார். வெளிக் கிடும்போது மென்நீல சாரமும் வெள்ளைக்கோடு விழுந்த ரீ சேட்டும்அணிந் திருந்தார். தயவுசெய்து தகவல் தெரிந்தவர்கள் எம். எம். சம்சுடீன், ஜின்னு ரேட், இல. 4, கலீமா வீதி, யாழ்ப்பாணத்திறகு அறிவககவும.

1563 தகவல்: தந்தை

விற்பனையாகின்றன புதிய கணித சேவை வெளியீடுகள்

கணிதப்பயிற்சி க. பொ. த. ப. (சா. த)

### வகுப்புக்களுக்குரியது

| | | |
|---|---|---|
| பகுதி I | 9-ம் வகுப்புக்குரியது | ரூபா 12 - 25 |
| பகுதி II | 10-ம் வகுப்புக்குரியது | ரூபா 12 - 25 |

ஏனைய வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| கணிதப் பயிற்சி | 6-ம் வகுப்பு | ரூபா 12 - 25 |
| கணிதப் பயிற்சி | 7-ம் வகுப்பு | ரூபா 12 - 50 |
| கணிதப் பயிற்சி | 8-ம் வகுப்பு | ரூபா 12 - 50 |

ஆசிரியர்கள்
வே. நடேசபிள்ளை B. S.. C. DIP. IN END.
க. சிதம்பரப்பிள்ளை B. A. DIP. IN END.

மற்றும்
விஞ்ஞானம் 8-ம் வகுப்பு அடங்கள் II ரூபா 6-00
(3-ம் தவணைக்குரியது)
விஞ்ஞானம் 9-ம் வகுப்பு வினவிடை ரூபா 9-00
ஆசிரியர் ஜெகநாதன் (விஞ்ஞான ஆலோசகர்)

**மாக்மில்லன் புத்தகசாலை,**
இல. 3, பஸ்நிலையம், யாழ்ப்பாணம்.
(1584)

## 31-ம் நாள் நினைவஞ்சலி
## சின்னத்தம்பி நாகலிங்கம்

**தோற்றம்: 1907-06-26 மறைவு: 1984 08 04**



அன்பின் திருவுருவாய், பாசத்தின் பிறப்பிடமாய் குடும்பத்தின் ஒளிவிளக் காய், எல்லோருக்கும் இனியவராய் திகழ்ந்து அணைந்துவிட்ட பாசச் சுடரே! எம்மையெல்லாம் என்றென்றும் ஆருத்துய ரில் ஆழ்த்திவிட்டுத் தெய் வத்துடன் சங்கமமான எம்தெய்வமே! நீங்கள் மறைந்து 31 நாட்களாகு லும் உங்கள் இனியநினைவு களை மறக்கமுடியாது தவிக் கிறேம். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறை வனைப் பிரார்த்திக்கின் ரேும்.

5-8-84 திங்கள் நடைபெற்ற அன்னரது இறுதிச் சடங்குகளின்போது எம்முடன் துக்கத்தில் பங்கெடுத் தும் எமக்குப் பல உதவிகளையும் புரிந்த உற்ருர், உற வினர், நண்பர்களுக்கு எமது நன்றியைத் தெரிவிப்ப தோடு நாளை 4-9-84 செவ்வாய்க்கிழமை காரைநகர் வடக்குச் சாம்பலோடை மயானத்தில் நடக்கும் அந்தி யேட்டிக்கிரியைகளிலும் அன்றைய தினம் நண்பகல் காரைநகர் வடக்கு பண்டித்தாழ்வில் உள்ள எமது ''சரஸ்வதி பவன'' இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிரியைகளிலும் வருகைதந்து சிறப்பிக்குமாறு அன்பு டன் அழைக்கிறேம்.

இங்ஙனம்
**திருமதி சிதம்பரம் நாகலிங்கம் (மனைவி)**
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**ஆண்டிஐயா (சகோதரர்)**

''சரஸ்வதி பவனம்'', பண்டித்தாழ்வு,
காரைநகர் வடக்கு. 1435

## அமைச்சர் எஸ். டி. சோமசுந்தரம் விவகாரம்:

# அமைச்சரவை, கட்சியிலிருந்து நீக்க

# அ.தி.மு.க. பொதுச்சபை அங்கீகாரம்!

சென்னை, செப் 2, தமிழ்நாடு உணவுத்துறை அமைச்சர் திரு. எஸ். டி. சோமசுந்தரத்தை அமைச்சரவையிலிருந்தும், அ. தி. மு கவிலிருந்தும்நீக்கும் தீர்மான மொன்றை அ. தி. மு. க செயற்குழு நிறைவேற்றியுள்ளது. இத்தீர்மானத்தை இக்கட்சியின் பொதுக்குழு நேற்று அங்கீகரித்தது.

இத்தகவலை அ. தி. மு. க. வின் பொதுச் செயலாளர் திரு பா. உ. சண்முகம் பொதுக்குழுக் கூட்டம் நிறைவடைந்தபின்னர் வெளியிட்டார்.

திரு. எஸ். டி. சோமசுந்தரம் தமிழ்நாடு அ. தி. மு. க அரசில் சிரேஷ்ட அமைச்சராகவும் முக்கிய கட்சிஉறுப்பினராகவும் இருந்துவந்தார். அண்மைக்காலங்களில் இக்கட்சியின் சில பிரதானபுள்ளிகளுடன் இவர்கருத்து வேற்றுமை கொண்டிருந்தார். இதனையடுத்து இக்கட்சியின் அந்தரங்க விவகாரங்கள் சிலவற்றை இவர் பகிரங்கப்படுத்தியதுடன், மேலும் பலவற்றை அம்பலமாக்கப்போவதாகவும் தெரிவித்தார்.

திரு. எஸ். டி. சோமசுந்தரம் அ. தி. மு. க வின் கொள்கைவிளக்க செயலாளரும்,முன்னுள் நடிகையுமான செல்வி ஜெயலலிதாவுடனேயே பெரிதும் கருத்துவேற்றுமை கொண்டிருந்தார்.

அ. தி. மு. க பொதுக்குழு திரு. சோமசுந்தரத்தை பதவி நீக்கஞ்செய்யவேண்டுமென தீர்மானித்ததையடுத்து தமிழ்நாடு சட்டசபை அமைச்சரவையில் பெரும் மாற்றங்கள் கொண்டுவரப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை திரு. எஸ். டி. சோமசுந்தரம், தாம் பதவி நீக்கஞ் செய்யப்பட்டால் அ. தி. மு. கவை கடுமையாக எதிர்க்கப்போவதாகவும், அக்கட்சியின் உட்பூசல்களையும், ஊழல்களையும் அம்பலப்படுத்தப்போவதாவும் சூளுரைத்துள்ளார். (கி)

## "சோவியத்துடன் தொடர்பு வைப்பதை அமெரிக்கா குறைத்துவருகிறது!"

### அதிபர் சேர்நென்கோ!

மாஸ்கோ, செப். 2

''ஆயுதக் கட்டுப்பாடு விடயத்தில் அமெரிக்கா, சோவியத்துடன் தொடர்பு வைப்பதைக் குறைத்துவருகின்றது. அத்துடன் அதுதனது ஆயுத விஸ்தரிப்பு நடவடிக்கையையே தீவிரமாக அமுலாக்குகின்றது'' என்று சோவியத் அதிபர் திரு. கொன்ஸ்ரன்ரின் சேர்நென்கோ தெரிவித்தார்.

சோவியத் யூனியனின் உத்தியோகபூர்வ பத்திரிகையான 'பிராவ்தா'வுக்கு பேட்டியளித்தபோதே மேற்கண்டவாறு அவர் கூறினுர்.

அவர் தொடர்ந்து கூறியதாவது: ''அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கைபற்றி திரு. றீகன் குடியரசுக்கட்சி வேட்பாளர் நியமன மகாநாட்டில் கூறியிருப்பவை அபாயகரமானவை. இதுகுறித்து சோவியத்யூனியன் மிகவும் அதிருப்திகொண்டுள்ளது'' என்றுர்.

வியன்னுவில் அமெரிக்க சோவியத் ஆயுதப் பரிகரணப் பேச்சுக்களை ஆரம்பிப்பது பற்றி அவர்தெரிவித்ததாவது: ''சோவியத் முன்வைக்கும் ஆயுதப்பரிகரணம்பற்றிய விடயங்களையும், ஆலோசனைகளையும் அமெரிக்கா ஏற்றுக்கொண்டாலேயே வியன்னுவில் சோவியத் பேச்சுக்கள் நடத்தும்'' என்றுர்.

அவர் மேலும் அமெரிக்காவின் வெளியில் இராணுவ சாதனங்களை குறைப்பதுகுறித்தும் அமெரிக்கா பேச்சுக்களை சோவியத்துடன் நடத்த வேண்டுமென வலியுறுத்தினுர். (கி)

## நன்னீர்த் திட்டம்

(கொழும்புத்துறை)

தொல்புரம் மத்தி கொட்டடிப் பதி அருள் மிகு ஸ்ரீ ஆதி முத்து மாரி அம்பாள் ஆலயத்தில் நன்னீர்த்திட்டம் ஆரம்பித்து வைக்கப் பட்டுள்து.

ஆலய சங்காபிஷேக தினத்தன்று ஆலயத்தில் நன்னீர் குழாய் மூலம் விநியோகம் செய்து வைக்கப்பட்டது.

ஆலய பரிபாலன சபையும் தொல்புரம் மத்திய சன சமூக நிலையமும் மேற் தொண்ட முயற்சியைத் தொடர்தே இந் நன்னீர்த்திட்டம் ஆரம்பிக்கப் பட்டது.

## இரத்த அமுத்தப் பரிசோதனை

[சாவகச்சேரி]

சாவகச்சேரி லயன்ஸ் கழகமும், லியோகழகமும் இணைந்து சாவகச்சேரி கட்டடத்தில் இலவச இரத்த அழுத்தப் பரிசோதனையை நடாத்தினர்.

இப்பரிசோதனையை லயன்ஸ் கழகத் தலைவர்லயன்ஸ் கே. சிவஞானசுந்தரம் தலைமையில் டாக்டர்கள் நீ. சோமசுந்தரம் சாவகச்சேரி மாவட்ட வைத்திய அதிகாரி, பே. பிலிப்ஸ், எஸ். கோபாலகிருஷ்ணன், எஸ். சிங்கராசா, எஸ். எஸ். அருளானந்தன் ஆகியோர் மேற்கொண்டனர்.

சுமார் 300 க்கும் மேலான மக்கள் இப்பரிசோதனை மூலம் பயன்பெற்றுள்ளதாக லயன்ஸ் கழகத் தலைவர் தெரிவித்தார்.

## டுபாயிலுள்ள கடத்தல்காரர்களை

## "ஐக்கிய அரபு இராச்சியமே தண்டிக்க வேண்டும்!"

### இந்தியா வேண்டுகோள்!

புதுடில்லி, செப் 2,

டுபாயில் சரணடைந்துள்ள ஏழுஇந்திய விமானக்கடத்தல் காரர்களையும் டுபாய் அரசாங்கமே விசாரித்துத் தண்டிக்க வேண்டுமென்று இந்திய அரசு ஐக்கிய அரபுஇராச்சியத்திடம் கேட்டுள்ளது.

இந்த ஏழு கடத்தல்காரர்களுக்கும் விதிக்கும் தண்டனை எதிர்காலத்தில் விமானக்கடத்தல்கள் இடம்பெறுவதைத் தடுக்கும் ஒரு எச்சரிக்கையாகவுமிருக்க வேணடுமென இந்திய அசு கேட்டுள்ளது.

தற்போதுடுபாய் அரசின் பாதுகாப்பிலுள்ள இந்திய விமானக் கடத்தல்காரர்கள் மீது சட்டநடவடிக்கை எடுப்பதுகுறித்து இன்று ஐக்கிய அரபு இராச்சியம் முடிவெடுக்கும் என்று கூறப்படுகிறது.

இதேவேளை இக்கடத்தல்காரர்களின் வேண்டுகோளின் பேரில் இவர்களை அமெரிக்கா செல்ல அனுமதிப்பதற்கு டுபாய்இணங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இது குறித்து இந்தியாதனது கடும் ஆட்சேபனையை டுபாய் அரசிடம் தெரிவித்துள்ளது. (கி)

UNIQUE COMMUNICATION SERVICE

யுனிக் கொமுயுனிக்கேசன் சேர்விஸ்



நொடிப்பொழுதில் தெளிவான சர்வதேச தொலைபேசி ரெலெக்ஸ் அழைப்புகளுக்கு இன்றே நாடுங்கள் - யுனிக்

24 மணிநேர சேவை

யாழ் நகர அலுவலகம்
28/18 - 11 மகாதமா காந்தி ரோட்,
(சலுசலவுககு அனமையில)
யாழபபாணம்.
ரெலெகஸ்: 22285 PERIMR CE
தொலைபேசி 22789 22891

கொழும்பு நகர அலுவலகம்
அவுஸதிரேலியா கடடிடம
த.பெ 1917, 54 யோர்க வீதி, கொழும்பு :
ரெலெகஸ் - 21652, 21742 21918 21931, PERIMR CE
தொலைபேசி:-22726 547884, 548626, 549065, 549066

## "ஆந்திர அரசு பெரும்பான்மை விரைவில் நிரூபிக்கப்பட வேண்டும்!"

### 10 எதிர்கட்சிகள் கோரிக்கை

புதுடில்லி, செப் 2,

ஆந்திரமாநிலத்தில் புதிய அரசுக்குரிய பெரும்பான்மை பலம் விரைவில் நிரூபிக்கப்பட வேண்டுமென இந்தியாவின் இரு கம்யூனிஸ்ட்கட்சிகள் உட்படபத்து எதிர்க்கட்சிகள் ஆந்திர ஆளுநரைக் கேட்டுள்ளன.

கடந்த மாதம் 16ந்திகதி ஆந்திர முதலமைச்சர்பதவியிலிருந்து திரு. என். டி. ராமராவ் பதவிநீககஞ் செய்யப்பட்டதையடுத்து புதிய மாநில அரசின் பெரும்பான்மைவலு நிரூபிக்கப்படவில்லை.

முன்னுள் இந்தியப்பிரதமரும், லோக்தள் கட்சித்தலைவருமான திரு. சரண்சிங் எதிர்வரும் புதன்கிழமை ஆந்திர ஆட்சிமாற்றம் சம்பந்தமாக அமைதியான எதிர்ப்பு நடவடிக்கை ஒன்றைமேற்கொள்ளப்போவதாகக் கூறினுர். விரைவில் ஆந்திர அரசின் பெரும்பான்மை பலம் நிரூபிக்கப் படாவிட்டால் பொதுவேலை நிறுத்தமொன்றை நடத்தும்படி தாம் கேட்கப்போவதாகவும் கூறியுள்ளார். (கி)

## மீனவர் பாதிப்பு

### கடலுக்குச் செல்ல அச்சம்

[புலோலி]

வடமராட்சிப்பகுதியில் மீன்பிடியாளர்களின் மீன்பிடித்தொழில் மிகப்பாதிப்படைந்துள்ளதாகவும். மீனவர்கள் கடலுக்குச் செல்வதற்கு அஞ்சவேண்டியும் இருப்பதனுல் இப்பகுதி மீனவர்கள் பெரும் பாதிப்படைந்து அல்லலுறுவதாகவும் மீனவர்களின் இக்குறைபாட்டை நீக்கி விமோசனமளிக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் பருத்தித்துறை சுப்பர் மடம் கடற்றொழில் விரிவாக்க சேவா சங்கத்தலைவர் திரு. த. தியாகராசா யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்தைக் கேட்டுள்ளார்.

அவரால் அரசாங்க அதிபருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது;- ''எமதுமீனவர்கள் கடலுக்குச் சென்று அன்றுடம் தொழில் செய்வதன் மூலம் தங்கள் நாளாந்த சீவியத்மைப் போக்கி வந்தனர். ஆனுல் கடந்த மாதம் 4-ம் திகதி தொடக்கம் இப்பகுதியில் ஏற்பட்ட பதட்டநிலை காரணமாகவும், கடற்படையினரின் கெடுபிடிகளினுலும் எமது மீனவர்கள் கடலுக்குச் சென்று தொழிலைச் செய்யமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது இந்நிலை தொடருமானுல் எமது பகுதியில் பல மீனவர்கள் பட்டினிக் கொடுமையினுல் இறக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படவுள்ளது. எனவே இப்பகுதி மீனவர்கள் தொழிலை மேற்கொள்வதற்கு வேண்டிய பாதுகாப்பு வசதிகளையோ, அல்லது அவர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இக்கடிதத்தின் பிரதிகள் யாழ். மாவட்ட கடற்றெழில் விரிவாக்க அதிகாரி, பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் ஆகியோருக்கு அனுப்ப வைக்கப்பட்டுள்ளன.

## பிரிட்டன்-லிபியா மீண்டும் ராஜதந்திர உறவு!

லண்டன், செப். 2

பிரிட்டன் மீண்டும் ராஜதந்திர உறவுகளை லிபியாவுடன் ஆரம்பித்துள்ளது. லிபிய அரசின் ராஜதந்திரி ஒருவரை லண்டனில் இருந்து இயங்க பிரிட்டிஷ் அரசு அனுமதித்துள்ளது

கடந்த ஏப்ரல் மாதம் பிரிட்டனில் லிபியத் தூதரகத்துக்கு முன்னுல் இடம்பெற்ற ஆர்ப்பாட்டமொன்றின் போது பிரிட்டிஷ் பெண் பொலிஸ் ஊழியர் ஒருவர் இயந்திரத் துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்டார். இதனையடுத்து இவ்விரு நாடுகளும் தமது ராஜதந்திர உறவுகளை முறித்துக்கொண்டன.

லிபியா இரு பிரிட்டிஷ் பிரஜைகளையும் தடுத்து வைத்திருந்தது. இவ்விருவரும் இரு தினங்களுக்கு முன்னர் விடுதலை செய்யப்பட்டனர். இதனைத் தொடர்ந்தே பிரிட்டனும் லிபியாவுடன் ராஜதந்திர உறவுகளை மீண்டும் கொண்டிருக்க முன்வந்துள்ளன

தற்காலிகமாக லண்டனிலுள்ள சவூதி அரேபிய தூதரகத்திலேயே லிபிய ராஜதந்திரி தமது நாட்டு விவகாரங்களை கவனிப்பார் என்று கூறப்பட்டது. (கி)

### மணிவாக்கு

செல்வம் சேர்ப்பதில் மட்டும் நாம் இறக்கும் மனிதர்கள் அல்ல. புகழைச் சம்பாதிப்பதிலும்கூட நாம் மரணம் அடைகின்றோம். ஆனால் நாம் உண்மையை நாடுவதிலே அழியாத தன்மை அடைகிறோம். ஆகவே அழிவுக்கு நாம் அஞ்சவேண்டிய அவசியமே இல்லை.

— தோரோ

# நமது நோக்கு

## 'போர்' நிறுத்தம் சமாதான தீர்வுக்கு அவசியம்

இலங்கை வாழ் தமிழ் மக்கள் அமைதி வாழ்வை விரும்புகிறவர்கள். ஏனைய சமூகத்தவர்களுக்கு இப்பண்பு புறம்பானதென்ற கருத்துப்பட இவ்வாறு கூறவில்லை.

தமிழ்க் கலாசாரம் உயர்ந்த சிந்தனையையும் எளிய வாழ்வையும் இலட்சியமாகக் கொண்டு வளர்ந்த பாரம்பரியமுடையது.

சுமார் ஒன்றரைக் கோடி மக்கள் வாழும் இந்நாட்டில் இன்றைய காலகட்டத்தில் எழுந்த அரசியல் பாகுபாடு 30 லட்சம் சமாதான வாழ்வை விரும்பும் தமிழ் மக்கள் மத்தியில் ஏமாற்றம் அளித்தது.

இலங்கை அரசின் 'பெரும்பான்மை' அட்டூழியம் தமிழ் மக்களைத் தாக்கத் தொடங்கியதும் உணர்ச்சிவசப்பட்ட இளைஞர் தீவிரவாதத்தில் இறங்க நேரிட்டது.

குறிப்பாக 1978 ஏப்ரல் மாதத்தை தொடக்கமாக எடுத்தால் பூனைகள் புலிகளாக மாறின சரித்திரம் செவ்வனே புரியும்.

அன்று தொடக்கம் இன்று வரைக்கும் இந்த இளைஞர் இயக்கம் எவ்வளவு பெரிதாக வளர்ந்ததென்பதை நாம் வெறும் கற்பனை கொண்டு கணிக்கமுடியாது.

புள்ளி விபரங்களைச் செவ்வனே கையாளும் சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கைத் தமிழ் இளைஞர்களில் எக்காரணம் கொண்டும் மோகமுடையதல்ல.

வன்செயல், கொலை எதனையும் எங்கும் கண்டித்து, பிணக்கை ஒழித்து, போரை நிறுத்தி, அநீதிக்குப் பலியாகும் மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் மன்றம் சர்வதேச மன்னிப்புச் சபை

நாட்டின் அரசும் அதன் ஒரு பகுதி மக்களும் போராடும் போது அதன் அனுதாபம் ஆயுதப்பலமற்ற மக்கள் இயக்கத்துக்கு ஓரளவு சார்பானதென்றால் அதில் என்ன தவறு?

ஏப்ரல் 1978ல் தொடங்கிய 'புலிகள் இயக்கம்' இன்று வரைக்கும் இச்சிறு நாட்டில் ஒரு பெரும் குளப்பமாகவிருப்பதானால், அதனை முளையில் அரச தந்திரத்துடன் கிள்ள முடியாத ஆட்சியே பொறுப்பென்பது அந்த அறிக்கையின் முடிவு.

மிகச்சிறிய சாதாரணமான கெரில்லா இயக்கம் அரச படையின் ஆற்றலற்ற காரணத்தால் அடக்கப்படவில்லை. அதனை ஒழிக்க பொதுமக்கள் ஆதரவு எவ்வாறு கிடைக்கும்? எனவே பயங்கரவாத தடைச் சட்டம் 'போர்' என்ற நிலையை உருவாக்கி பல அழிவுகளுக்கு இடமளித்திருக்கிறது.

கைப்புண்ணுக்கு கண்ணாடி தேவையா? என்று நாம கேட்பது இயல்பு. இருப்பினும் தாக்கப்பட்ட மக்கள் நாமென்ற காரணத்தால் இத்தகைய பாரபட்சமற்ற பரிசோதனை எமது பரிதாபநிலையை நன்குஉறுதி செய்வதால் அதனை இங்கு குறிப்பிடுகின்றோம்.

கடந்த நான்கு வருடங்களாக நாட்டின் தமிழ்மக்கள் போர்க்களத்தின் புருவத்தில் வாழ்ந்து வருகிறார்கள். குறிப்பாக பயங்கரவாதத் தடைச் சட்டம் காவற் படையினருக்கும் 'புலிகளுக்கும்' ஒருமுடிவில்லாத போரை உருவாக்கி விட்டது.

கெரில்லா யுத்தத்தின் நுட்பம்புரியாத இலங்கை ராணுவம் 'பயங்கரவாதிகள்' கொல்லப்பட்டனர் என்றால் அது நாட்டில் வாழும் அப்பாவி மக்கள் உள்ளிட என்பது சொல்லாமலே விளங்கும்.

இன்று விசேட பயிற்சியும் ஆயுத உதவியும் பெற்று இந்தப்போரை ஒருமுடிவுக்குக்கொண்டுவருவது அரசின் அவசர நோக்கமென்பது தெளிவாகிறது.

இதற்கு 'யாழ்ப்பாணம்' கொலைக்களமாய்விட்டது. தமிழர் பிரச்னைக்கு தீர்வு காணும் பேச்சுக்கள் விகடராமன் குதிரை வேகத்தில் நடைபெறுகின்றன ஆனால் பயங்கரவாதப்போர் அசுர வேகமாகின்றது. இந்த விசித்திரமான போக்கு நீக்கப்பட வேண்டும்.

நாம் மேலே குறிப்பிட்ட அறிக்கையின் சாராம்சம் "இந்தச்சின்ன நாட்டில் ஒரு சிறு தொகையினரான அமைதியாக வாழும் தமிழர் சமூகத்தில் ஒருசில 'இளைஞர் வன்செயல் இயக்கம்' இந்த நீண்டகாலம் தொடர்வது அரசின் அடக்கு முறையால் எழுந்த செயற்கைச் சம்பவம்". என்பதே இயற்கைக்கு மாறானது, இனியாவது இதனை உணர்வது அரசின் அவசிய தேவை.

தமிழ்ப்பகுதிகளில் குறிப்பாக யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் ராணுவ-பயங்கரவாத மோதல் ஒழிந்தபாடில்லை. பொதுமக்கள் அவர்களின் உயிர் உடைமையின் அழிவு தொடர்வதை அரசாங்கம் பார்த்துக் கொண்டிருப்பதன் நோக்கமென்ன? வெற்றி கிட்டுமென்றநம்பிக்கை போலும்.

நூற்றுக்கணக்கான இளைஞர்கள், மாணவர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்படுவதும் இந்தப் 'போரை' தீவிரப்படுத்தும் செயலாகும். கெடிக்கலக்கத்தில் வாழும் மக்கள் அரசின் நடவடிக்கைகளுக்கு அடிபணிவார்களோ?

சமாதானப்பேச்சில் அர்த்தமிருக்குமானால் இந்த நிலைஉடனடியாக நீக்கப்பட வேண்டும் ராணுவம் மட்டுமல்ல, பயங்கரவாதச் சட்டம், அவசரகாலஆட்சி நீக்கப்பட்டு, 'போர்' நிறுத்தம் என்ற தீர்மானத்துக்குப் பொருத்தமான நிபந்தனைகளைக் குறிப்பிடவேண்டும். இருபகுதியினரும் துப்பாக்கியைக்கைவிட ஆவன செய்வது நாட்டைப் பாதுகாக்கும் நடவடிக்கையாகும்.

# "இலங்கை சி. ஐ. டி பொலிஸாருக்கும் நாம் 'பயிற்சி அளித்தோம்"

## இஸ்ரேல் நலன் காக்கும் மட்ஜய் பேட்டி

(கொழும்பு)

"இலங்கையில் 'தமிழ்ஈழப், பிரசனை, மற்றும் ஏனைய இனப்பிரச்னைகள் தோன்றுவதற்கு வெகுகாலத்திற்கு முன்னரே 1966ம் ஆண்டில இலங்கை சி. ஐ டி. பொலிஸார் இஸ்ரேலில் பயிற்சி பெற்றுள்ளனர்" என்று தற்போது இலங்கையிலுள்ள இஸ்ரேலிய நலன்காக்கும் பிரிவைச்சேர்ந்த இஸ்ரேலியரான திரு. மட்ஜய் 'ஐலன்ட் ஆங்கிலப்பத்திரிகைக்கு வழங்கியுள்ள பிரத்தியேக பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

திரு. மட்ஜய் மேற்படிப் பேட்டியில் இஸ்ரேல் நலன் காக்கும் பிரிவுபற்றிய சர்வதேசரீதியிலும், உள்நாட்டிலும் எழுந்த சந்தேகங்கள் குறித்து விரிவானவிளக்கங்கள் எதனையும் தராதபோதிலும், சுருக்கமாகசில தகவல்களை வெளியிட்டுள்ளார்.

இவர் உலகின் பல நாடுகளில் இஸ்ரேலிய ராஜதந்திர அலுவலகங்களில் பத்திரிகைப் பேச்சாளராகவும், ஆலோசகராகவும் பணிபுரிந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பேட்டியில் திரு. மட்ஜயிடம் கேட்கப்பட்ட சில கேள்விகளும், அவர் அளித்த பதில்களும் வருமாறு:

"1970ம் ஆண்டில் திருமதி. சிறிமாவோபண்டார நாயக்கா பதவிக்குவந்தபோது, எம்மை, நாம் கைப்பற்றிய அரபுப் பகுதிகளிலிருந்தும் வெளியேறும்படி கேட்டார். பின்னர் எம்முடன் ராஜதந்திர உறவுகளை முறித்துக்கொண்டார். ஆயினும் நாம்விரும்பினால் எமது விவசாய நிபுணர்களை இந்நாட்டில் வைத்திருக்கலாம் என்று அவர்கூறியதை நான் தெரிவிக்கவிரும்புகிறேன்" என்று திரு. மட்ஜய் பேட்டியை ஆரம்பித்தார்.

கேள்வி: "எப்போது கொழும்புக்கும் உங்கள் நாட்டுக்குமிடையே தொடர்பு ஏற்படுத்தப்பட்டது? எந்தளவில்?

பதில்: "ஏறத்தாள ஒருவருடத்திற்கு முன்னர். மிகவும் குறைந்தளவிலேயே ஜூன் 1983ம் ஆண்டில் இத்தொடர்புஆரம்பமானது.

கேள்வி: தொடர்பு ஆரம்பமான மாதத்தில் ஏதாவது முக்கியத்துவம் உண்டா?

பதில்:- ஆம், ஜூலை இனக்கலவரத்துக்கு முன்னரே எமது தொடர்பு ஏற்பட்டது.

கேள்வி: தற்போது இலங்கையில் இருந்துவரும் இனப்பிரச்னையில் உங்களின் தலையீடு ஏதுமுண்டா?

பதில்; இல்லை, அப்பிரச்னையில் நாம் தலையிடவில்லை. தயவு செய்து இவ்விடயத்தை தெளிவாக்கவும்; இஸ்ரேல் இலங்கையில் எந்த ஒரு இனத்துக்குமோ, அல்லது குழுவுக்குமோ மதத்துக்குமோ எதிரானதல்ல. நம் தமிழ்ச் சமூகத்துக்கெதிரானவர்களல்லர். தமிழ் மக்களுடன் எந்த விதபகைமையும் எமக்கில்லை.

கேள்வி: அப்படியானால் உங்கள் நாட்டு உதவிபற்றி இலங்கைப் பாராளுமன்றிலும், பத்திரிகைகளிலும் காரசாரமாக விமர்சிக்கப்பட்டுள்ளது. உத்தியோக பூர்வமாகவும் இராணுவ ஆலோசனைகள், உதவிகளை உங்கள் நாடு இலங்கைக்கு வழங்குவது பற்றி தெரிவிக்கப்பட்டுள்ளது, இது பற்றி ஏதும்...?

பதில்: இஸ்ரேலில் எமது பாதுகாப்பு அலுவல்கள், நடவடிக்கைகள் குறித்து பொது இடங்களிலோ, பத்திரிகைகளிலோ பகிரங்கமாக ஆராய்வதில்லை.

கேள்வி: "எனவே விரிவாக இந்தியபாராளுமன்றம், அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மன் பத்திரிகைகள், ஏனைய சர்வதேச செய்திச் சேவைகளினால் பரந்தளவில் விமர்ச்சிக்கப்பட்ட இவ் விடயம்பற்றி நீங்கள் எதுவும் கூற விரும்பவில்லைப் போலும்

பதில்: ஆம்; ஆனால் இதை மட்டும் கூறுகிறேன். 1966-ம் ஆண்டில் இலங்கையில் 'தமிழ் ஈழப்' பிரச்னை ஏனைய இனப் பிரச்னைகள் ஆரம்பமாவதற்கு வெகு காலத்துக்கு முன்னரே இலங்கை சி. ஐ. டி பொலிஸாருக்கு அவர்கள் பிரிட்டன் செல்லும் வழியில் அல்லது அங்கிருந்து திரும்பும் வழியில் இஸ்ரேலில் அவர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது.

கேள்வி; "எனவே இலங்கையில் இஸ்ரேல் நலனகாக்கும் பிரிவு குறித்து மக்களுக்கு நீங்கள் கூறவிரும்புவது?

பதில்: எந்த ஒருநாட்டிலும் சில விடயங்கள் இரகசியமாக தனிப்பட்ட முறையில் வைத்திருக்கப்படவேண்டும்.

(கி)

# "போர் ஓய்வு தேவை!

இனப் பிரச்னைக்கு ஒரு நல்ல தீர்வு காணும் முகமாக சமரச நடவடிக்கைகளுக்கு வசதியாக சிறிது காலத்துக்காவது 'போர் ஓய்வு' வேண்டுமென்று சர்வ மத சபைச் செயலாளர் டாக்டர் வல்பொலராகுல சில தினங்களுக்கு முன் கோரிக்கை விடுத்திருந்தார்.

தீவிரவாதத் தமிழ் இளைஞர்கள் தங்கள் தாக்குதல்களைச் சிறிது காலத்துக்கு நிறுத்தி வைக்க வேண்டுமென்பதும் இதே சமயம் ஆயுதப் படைகளின் நடமாட்டங்களையும் நடவடிக்கைகளையும் நிறுத்தி வைக்க வேண்டுமென்பதும் டாக்டர் வல்பொலராகுலவின் யோசனையாகும்.

இதே போன்று 'போர் ஓய்வு' யோசனையை முன்னாள் இந்திய மத்திய நிதி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் சில தினங்களுக்கு முன் தெரிவித்திருந்தார்.

அதேநேரத்தில் இப்பொழுது தான் வட்ட மேசை மாநாடு தமிழ் மக்களின் உண்மை நிலையை ஆராயத் தொடங்கியிருக்கிறதென்று தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அமிர்தலிங்கம் கூறியிருக்கிறார்.

இந்நிலையில் வட்ட மேசை மாநாடு கூட்டப்பட்ட நோக்கம் ஒருபுறமிருக்க, பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்வு காண்பதற்குப் பதிலாக இராணுவ நடவடிக்கை மூலம் தீர்வு காணும் நோக்கத்துடன் வெளிநாடுகளிலிருந்து உதவி பெறுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்ததுபோல்அல்லாது உண்மையிலேயே 'போர் ஓய்வு' செயல் படுத்தப்படவேண்டும் என்பதே முக்கியமாகும்.

வழமையில் 'போர் ஓய்வு' என்பது அடுத்த நடவடிக்கைக்கு ஆயத்தம் செய்வதற்கு ஒரு கால அவகாசமாகப் பல இடங்களிலும் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. வியட்நாமில் இது அடிக்கடி நடைபெற்று வந்தது.

**எஸ். எம். ஜி.**

'போர் ஓய்வு' நிரந்தரமான சமாதானத்துக்கு வழிவகுக்க உதவ வேண்டும்.

இங்கு தீவிரவாத இளைஞர்கள் தாங்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளை சிறிது காலத்துக்கு ஒத்திவைக்க வேண்டுமானால் ஆயுதப்படைகளை இங்கிருந்து வாபஸ் பெறுவதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும். ஆயுதப்படைகள் வீதிகளில் களில் நடமாடக் கூடாது. சந்தேகத்தின் பேரில் எந்த இளைஞனும் இக்காலத்தில் கைது செய்யப்படக்கூடாது. வீடுகளிலும் வீதிகளிலும் ஆயுதப்படைகள் சோதனை போடுவது நிறுத்தப்படவேண்டும். சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ள இளைஞர்கள் விடுதலை செய்யப்படவேண்டும். விசாரணை எதுவுமின்றிக் காவலில் வைக்கப்பட்டுள்ள அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும்.

இவற்றை நிறைவேற்ற அரசாங்கம் முன்வருமானால் நிச்சயம் தீவிரவாத இளைஞர்களும் தங்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளை நிறுத்திவைப்பதற்கு முன்வருவார்களென்று எதிர்பார்க்கலாம்.

### கொலம்பியாவில் கெரில்லா இயக்கம்

கொலம்பியா என்ற நாட்டில் சோவியத்சார்பு கெரில்லா இயக்கமும் சீனச் சார்ப்பு கெரில்லா இயக்கமும் கடந்த முப்பதாண்டு காலமாகத் தாக்குதல் நடவடிக்கைகளில்ஈடுபட்டு வந்தன. இதனால் மூன்று லட்சம் பேர்வரை பலியாகியிருக்கின்றனர்.

கொலம்பியாவில்வன்செயல்களுக்குக்காரணமான பட்டினி வேலைவாய்ப்பின்மை, பள்ளிக்கூட வசதியின்மை ஆகியவற்றை நீக்குவதாக இரண்டு வருடங்களுக்கு முன் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி பெலிசாரியே பட்டன்கர் இப்பொழுது கெரில்லா இயக்கத்தினருடன் பேச்சுவார்த்தை நடத்தி சமாதான உடன்படிக்கை யொன்றையும் செய்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை மிகப்பெரிய கொரில்லா இயக்கமான சோவியற் சார்பு புரட்சிகர இயக்கம் சமாதான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டது. தாக்குதல் நடவடிக்கைகளை நிறுத்தும்படி தனது பன்னிரண்டாயிரம் உறுப்பினர்களுக்கும் இயக்க மேலிடம் உத்தரவிட்டது மற்றொரு இயக்கமான மாவோ மக்கள் விடுதலை இராணுவமும் சமாதான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு சண்டையை

(5ம் பக்கம் பார்க்க)

# அகதிகள் குடும்பங்களுக்கு வீடுகள்: நாளைமறுதினம் அடிக்கல்நாட்டு வைபவம்

[மட்டுவில்]

அகதிகள் புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் அமைக்கப்படவுள்ள 40 குடும்பங்களுக்களுக்கான வீடுகளுக்கு இம் மாதம் ஐந்தாம் திகதி காலை நல்ல முகூர்த்தத்தில் மறவன்புலோவில் யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் அடிக்கல் நாட்டிவைப்பார்,

கைதடி அகதிகள் முகாமில், இன்னும் அகதிகளாகத் தங்கியிருக்கும் 40 அகதிகள் குடும்பங்களுக்கு முதற்கட்டமாக மறவன்புலோ கிராமத்தில் இந்த 40 வீடுகளும் அகதிகள் புனர்வாழ்வுத் திட்டத்தின்கீழ் அமைக்கப்படவுள்ளன.

இந்த வீடுகளுக்கான அடிக்கல் நாட்டு வைபவம் தென்மராட்சிப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. கே. துரைராஜா தலைமையில் அன்று காலை நடைபெறும். இந்த வீடுகள் ஒவ்வொன்றும் தலா 18,000 ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# நடமாடும் விற்பனை நிலையம்: துப்பாக்கி முனையில் ரூ.21,000 கொள்ளை

[மட்டுவில்]

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நடமாடும் உணவுப்பொருள் விற்பனவு வாகனத்தை, இனந்தெரியாத மூன்று வாலிபர்கள் துப்பாக்கி முனையில் நிறுத்தி, ரூபா 21,000த்தை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இந்த நடமாடும் விற்பனை நிலைய வாகனம் மட்டுவில், நுணுவில், சரசாலைப் பகுதிக்குச் சென்று சீனி, மாவு போன்ற உணவுப்பொருட்களை விற்பனை செய்துகொண்டு மீசாலைக்குச் செல்லும் வழியில் வேம்பராயில் வைத்து கொள்ளைச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

சங்க நிர்வாகம் சாவகச்சேரிப் பொலிசாருக்குப் புகார் செய்துள்ளதைத் தொடர்ந்து பொலிசார் தீவிர புலன் விசாரணை மேற்கொண்டுள்ளனர் இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை.

## தேசிய அடையாள அட்டை விண்ணப்பப் படிவங்கள் தட்டுப்பாடு

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர்பிரிவில் தேசிய அடையாள அட்டைக்கான விண்ணப்பப் படிவங்களுக்கு தட்டுப்பாடு நிலவிவருகின்றது.

அவசரமாகத் தேசிய அடையாள அட்டைகோரி வரும் பொதுமக்களுக்கு மேற்படி விண்ணப்பப்பத்திரங்களை வழங்க முடியாது இருப்பதாக இப்பகுதி கிராமசேவை அலுவலர்கள் தெரிவிக்கின்றனர்.

## மதுவிற்பனையை நிறுத்துமாறு எச்சரிக்கை

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்புப் பகுதியில் கசிப்புதயாரித்த சில வீடுகளுக்குச்சென்ற இளைஞர் கோஷ்டியொன்று மதுவை உற்பத்தி செய்யவேண்டாம் என்று எச்சரிக்கை செய்து அங்கிருந்த கசிப்புத்தயாரிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களை சேதப்படுத்திவிட்டு சென்றுள்ளது.

அத்துடன் கசிப்புவிற்பனை செய்யும் இடங்களுக்கும் சென்று மதுவிற்பனையை நிறுத்துமாறும் மீறிவிற்பனை செய்தால் தண்டனைவழங்கப்படும் என்றும் இக்கோஷ்டியினர் எச்சரித்துவிட்டு சென்றதாக அறியப்படுகின்றது.

## சுயதொழில் வாய்ப்பு: 62 படித்த இளம்பெண்கள் பயிற்சிபெறத் தெரிவு

(மட்டுவில்)

இலங்கை மாதர் பணியத்தினர் தென்மராட்சிப் பகுதியில் சுயதொழில் வாய்ப்பு பயிற்சியளிப்பதற்காக படித்த 62 இளம் பெண்களைத் தெரிவு செய்துள்ளனர்.

தெரிவு செய்யப்பட்டபெண்களுக்கான சுயதொழில் பயிற்சி வகுப்புகளை தென்மராட்சிப் பிரிவு உதவி அரசாங்கஅதிபர் திரு.கே துரைராஜா இம் மாதம் 5ம் திகதி ஆரம்பித்து வைப்பார்.

சாகவச்சேரி நகரசபை சபா மண்டபத்தில் ஆரம்பமாகும் இப் பயிற்சி வகுப்புக்கள் சுமார் மூன்று வாரம் நடைபெறும்.

சுமார் 72 தொழில் முறைகளுக்கான பயிற்சிகள் வழங்கப்படும் என்றும் இதில் பயிற்சி பெறுவோருக்கு சுயதொழில் வாய்ப்பு வசதியளிக்கும் முகமாக ரூபா 1,500நிதி கொடுப்பனவும் வழங்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

## கிருஷ்ண ஜயந்தி

(புலோலி)

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் கிருஷ்ண ஐயந்தி விழா நடைபெற்றது.

வல்வெட்டித்துறையில் அண்மையில் நடைபெற்ற வன் செயல்களினால் பாதிக்கப்பட்டு கொற்றாவத்தை கலைவாணி சன சமூக நிலையத்தில் தஞ்சமடைந்திருந்த அகதிகளுக்கு இக் கிருஷ்ண ஐயந்தி விழாவையொட்டி சுவாமி சித்ரூபானந்தா உணவுப் பொட்டலங்களை வழங்கினர்.

## அகதிகளுக்கு உதவ யாழ். வை.எம்.சீ.ஏ நடவடிக்கை

(அரியாலை)

"கந்தர்மடம் பகுதியில் முற்றாக எரித்து நாசமாக்கப்பட்ட வீடுகளில் 8 வீடுகளைக் கட்டிக் கொடுக்க யாழ், வை. எம். சீ. ஏ. ஸ்தாபனம் நடவடிக்கை எடுத்து வருகிறது."

இவ்வாறு யாழ். வை. எம். சீ. ஏ ஸ்தாபனத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பொதுச்செயலாளர் திரு.எம். தம்பித்துரை சமர்ப்பித்த வருடாந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வை. எம். சீ. ஏ. மகாநாட்டு மண்டபத்தில் தலைவர் திரு. திசைநாயகம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பொதுச்செயலாளர் சமர்ப்பித்த ஆண்டறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

"1983-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் நடைபெற்ற இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்டு வடபகுதிக்கு வந்து அகதிகள் முகாம்களில் தங்கியிருப்போருக்கு வீடுகள் கட்டி வழங்குவதற்கு இயக்கச்சியில் 40 ஏக்கர் காணியை வை எம். சீ. ஏ. ஸ்தாபனம் கொள்வளவு செய்துள்ளது. அக் காணியில் எமது ஸ்லாபனத்தின்மூலம்50வீடுகளையும், வை. எம்.சீ ஏ ஸ்தாபனத்தின்நிதி உதவியுடன் 20 வீடுகளையும் கட்டிக்கொடுக்க ஏற்பாடுகள் செய்துள்ளோம். 6 மாதங்களுக்குள் வீடுகளைக் கட்டி முடிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களுக்கென சி. பி. எம். ஸ்தாபனம் வழங்கிய நிதியுதவியைக் கொண்டு சுய உதவித் திட்டத்தின் கீழ் திருமதிகள் பி. மகாதேவராசா, சிறி. கமலாம் கை, திரு. இராமசாமி ஜோன் ஆகிய மூவருக்கும் மூன்று தையல் மெஷின்களும், செல்வி யே. எஸ். எல். நாதனுக்கு சிறுவர் பாடசாலைக்குரிய தளபாடங்களும், திருவாளர்கள் ஏ. கிருஷ்ணகுமார் கே இராஜகோபால் ஆகிய இருவருக்கும் கோழிப்பண்ணை அமைப்பதற்கான உதவிகளும், 15 தொழிலாளர்களுக்கு தொழில்களுக்கான உபகரணங்களும், திரு. ஐ. முருகனுக்கு நிறுவை அளவைச் சாதனங்களும், திரு. எஸ். சிதம்பரநாதனுக்கு நில அளவைக்கான உபகரணங்களும் திரு.ரி. யோகநாதனுக்கு கடைநடத்துவதற்கு வேண்டிய அலுமாரியும், திரு. கே. தியாகரசாவுக்கு கடையொன்று நடத்துவதற்கான நிதி உதவியும் வழங்கப்பட்டது.

"நோர்டிக் சிறுவர் ஸ்தாபனம் வழங்கிய நிதியுதவியைக் கொண்டு யாழ்ப்பாணப் பகுதியைச் சேர்ந்த வறிய குடும்பத்திலுள் 58 பிள்ளைகளுக்கு உதவி அளித்து வருகிறோம். இதனோடு கலைமகள் வட்டாரத்திலுள்ள இரண்டு சிறுவர் பாடசாலைகளுக்கு உதவிகள் வழங்க இந்த ஆண்டு நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது."

பொருளாளர்அறிக்கையைத் தொடர்ந்து புதிய வருட நிர்வாகிகள் தெரிவில் தலைவராகத் திரு. எம். சி. பிரான்சிஸ்சும், பொதுச்செயலாளராக திரு. எம். தம்பித்துரையும், பொருளாளராக திரு. சாம். எஸ். சதாசிவனும் தெரிவு செய்யப்பட்டனர்.

## தேடுதல் வேட்டை

(வவனியா)

வவனியாவில் குறித்த சிலரைத் தேடிதேடுதல் வேட்டை நடைபெறுகின்றது.

பம்பைமடு, இரணை இலுப்பைக்குளம், கிடார்சூரிகல்மடு பகுதிகளிலும் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

தேடுதல் வேட்டைக்குச் சென்றவர்கள் வழமையாக தாம் செல்லும் வாகனங்களில் செல்லாது உழவு இயந்திர பெட்டிகளிலே சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

## கீரிமலை சிவநெறிக்கழகத்தின் சைவசமய அறிவுப் போட்டி

(பண்டத்தரிப்பு)

கீரிமலை சிவநெறிக்கழகம் பாடசாலை மாணவர்களிடையில் சைவசமய அறிவு வினாவிடைப் போட்டியொன்றை இம்மாதம் 30-ம் திகதியன்று நடாத்தவுள்ளது.

கீழ்ப்பிரிவு,மேற்பிரிவு என்று இரு பகுதிகளாக நடாத்தப்படும் இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் தங்கள் விண்ணப்பங்களை இம் மாதம் 21-ம் திகதிக்கு முன்னர் திரு ச.விநாயகரத்தினம், சிவநெறிக் கழகச் செயலாளருக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுள்ளார்.

இப்போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரு இடங்களைப் பெறும் பாடசாலைகளுக்கு சுழல் கேடயங்களும் குழுவில் அங்கம் பெறும் மாணவர்களுக்குத் தனித்தனி பரிசில்களும் வழங்கப்படும். என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது இப்போட்டியில் மேலும் விபரங்களை கீரிமலை சிவநெறிக் கழகச் செயலாளருடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஏமாற்றம் தாங்காது இளைஞர் தற்கொலை

[மட்டுவில்]

வெளிநாட்டு வேலைக்குச் செல்லவிருந்த இளைஞருக்கு ஏற்பட்ட ஏமாற்றம் காரணமாக அவர் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்ட சம்பவம் மட்டுவிலில் நிகழ்ந்துள்ளது.

மட்டுவில் வடக்கைச்சேர்ந்த கந்தையா சிவராஜா(25வயது) என்பவரே இப்படித்தற்கொலை செய்து கொண்டவராகும்.

வெளிநாட்டிற்கு வேலைக்குச் செல்ல ஆயத்தமாக இவர் இருந்தார் என்றும் இறுதியில் அது ஏமாற்றமாக முடிந்ததாகவும் பெற்றோர் மரண விசாரணையில் தெரிவித்தனர் விசாரணை முடிவில் தற்கொலை என மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

## போர்ஓய்வு

[4ம் பக்கத் தொடர்ச்சி]

நிறுத்தியுள்ளது. ஆனால் கியூபா சார்பு தேசிய விடுதலை இராணுவம் மட்டும்இந்த சமாதான உடன்படிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை.

ஆனாலும் இந்த சமாதான உடன்படிக்கை கொலம்பியாவின் புதிய ஜனாதிபதி பட்டன்கருக்கு ஒரு வெற்றியென்றே கருதப்படுகிறது.

ஜனாதிபதி ஜே ஆர் ஜயவர்த்தன சமீபத்தில் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகைக்கு அளித்த ஒரு பேட்டியில் தமிழ்த் தீவிரவாதிகள் ஆயுதங்களை கீழே போட்டால் அவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கத் தயார்" என்று தெரிவித்திருந்தார். இதற்கான நிபந்தனைகள் பற்றி நடுநிலைமை நாடொன்றில் தமிழ்த் தீவிரவாதத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அரசின் பிரதிநிதி ஒருவரைத் தாம் அனுப்பத் தயாரென்றும் ஜனாதிபதி ஜே. ஆர். தெரிவித்திருந்தார்.

கொலம்பியாஜனாதிபதியைப் பின்பற்றி முதலில் நடவடிக்கைகளை இலங்கை ஜனாதிபதியும் மேற்கொண்டால் நிச்சயமாக நல்லதொரு தீர்வு கிடைக்காமல் போகாது.

வட்டமேசை மகாநாட்டில் இனப்பிரச்னைக்குத் நிரந்தரமான தீர்வு காண முயற்சி மேற்கொள்ளும் அதே சமயம் நாட்டில் உடனடியாக அமைதியும் சமாதானமும் நிலவ இடைக்கால நடவடிக்கைகளையும் மேற்கொள்ளலாம்.

## சோதிடர்களுக்கு பட்டங்கள்

[யாழ்ப்பாணம்]

இலங்கைசோதிட ஆய்வுமன்றத்தின் பொதுக்கூட்டம் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் திரு. வ. முருகேசு தலைமையில் நடைபெற்றபோது திருவாளர்கள் வே. சின்னத்துரை, சு நடராசா மு. மு. மார்க்கண்டு ஆகியோருக்குப் பட்டங்கள்வழங்குவதென ஏகமனதாகத்தீர்மானிக்கப்பட்டது.

## திருக்கேதீஸ்வரத்தில் அகதிகள்

(மன்னார்)

அண்மையில் மன்னார், அடம்பன் ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற அசம்பாவிதங்களையடுத்துபலர் அகதிகளாக திருக்கேதீஸ்வரத்திற்கு வந்துள்ளனர்.

இவர்கள் திருக்கேதீஸ்வர ஆலயத்திலுள்ள மடங்களிலும், அதன் சுற்றுடலிலும் தங்கியிருக்கின்றனர்.

இவர்களுக்கு நிவாரண உதவி வழங்குவதற்கான நடவடிக்கைகளை மன்னார், உதவி அரசாங்க அதிபர் திரு.ஏ. பாஸ்கரதாஸ் மேற்கொண்டு வருகிறார்.

## சூட்டுக்காயத்துடன் அனுமதி

[யாழ்ப்பாணம்]

துப்பாக்கிச் சூட்டுக்காயத்துடன் சுமார் 50 வயதுள்ள ஒருவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சிவராசபிள்ளை என்பவரே காயத்துக் குள்ளானவராவார்.

துப்பாக்கிச்சூட்டுக் காயத்துக் கிலக்கான இவரை பொலிஸ் உத்தியோகத்தர் கொண்டுவந்து யாழ் ஆஸ்பத்திரியில் சேர்த்ததாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தது. [மா]

## தொழிலாலி படும்பாடு!

(மட்டுவில்)

பனையில் ஏறி ஓலை வெட்டிய ஒரு தொழிலாளியை அப்பனை ஓலையில் கூடுகட்டியிருந்த கருங்குளவிகள் கொட்டின! இருந்தும் அத் தொழிலாளி சுமார் 100 அடி உயரமான பனையிலிருந்து பத்திரமாக இறங்கி மயிரிழையில் உயிர் தப்பினார்.

மட்டுவில் தெற்கில் நடந்த இச்சம்பவத்தில் அரிச்சுனன் என்ற 38 வயது தொழிலாளியே குளவிக்கொட்டுதலுக் உள்ளானவராகும்.

கீழே இறங்கியதும் மயங்கி விட்ட அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மூன்றுநாள் சிகிச்சையின் பின்னரே மூர்ச்சை தெளிந்துஉயிர் தப்பினார்.

# வவனியாவில் 45,000 ஏக்கரில் பெரும்போக நெற்செய்கை

(வவனியா)

வவனியா மாவட்டத்தில் எதிர்வரும் பெரும்போக நெற்செய்கை சுமார் 45 ஆயிரம் ஏக்கரில் செய்கை பண்ணப்படவுள்ளது. அதே நேரத்தில் உழுந்து சுமார் 25 ஆயிரம் ஏக்கரில் விளைவிக்கத் திட்டமிட்டுள்ளதாக வவனியா விவசாய உதவிப் பணிப்பாளர் திரு. கே. குமாரசாமி தெரிவித்தார்.

விதை நெல்லும், விதை உழுந்தும் விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இம்முறை 450 ஏக்கரில் உருளைக்கிழங்கு, மிளகாய் செய்கை பண்ணவும் திட்டமிடப்பட்டுள்ளது.

பழமரச் செய்கையும் ஊக்குவிக்கப்படவுள்ளது.

## யாருடையது

இணுவிலைச் சேர்ந்த திரு நமசிவாயம் சுந்தரலிங்கம், மந்துவிலைச் சேர்ந்த திரு. வடிவேல் சின்னத்தம்பி, மட்டுவில் இல்லாரையைச் சேர்ந்த திரு. கந்தையா சிவநேசன் ஊரெழுவைச் சேர்ந்த திரு. பூபாலசிங்கம் சோதீஸ்வரன், மாத்தளையைச் சேர்ந்த திரு. ஆறுமுகம் நாகராசா, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. பொன்னுத்துரை சோமாஸ்கந்தன் ஆகியோரின் அடையாள அட்டைகளையும், 9ஸ்ரீ 9591ம் இலக்க வாகன ராக்ஸ், இன்சுரன்ஸ் உட்பட வேறு சிலரின் புகைப்படங்களையும், யாழ். மாநகரசபையைச் சேர்ந்த திரு. கி. சோமாஸ்கந்தமூர்த்தியும், குருநகர் மத்திய கிழக்குவீதியைச் சேர்ந்த திரு. அவுரும் அந்தோனிப்பிள்ளையின் அடையள அட்டையை உயிலங்குளம் ஆனந்தாஸ்ரோர்ஸ் உரிமையாளரும் யாழ். இராசசிங்கம் வீதியைச்சேர்ந்த திரு. கறுப்பன் இராசையாவின் அடையாள அட்டையையும் ஒருதொகைப் பணத்தினையும், திரு. கே. சிவலிங்கமும், நாரந்தனையைச் சேர்ந்த திரு, சவரிமுத்து அத்தனுஸ் என்பவரின் அடையாள அட்டையை திரு கே விஜேந்திரனும், வேலணை கிழக்கைச்சேர்ந்த திருமதி இராசலெட்சுமி பொன்னையாவின் அடையாள அட்டையை திரு. செ. மகேந்திரனும் ஆனைக்கோட்டையை சேர்ந்த திரு. சண்முகம் இராசரத்தினத்தின் அடையாள அட்டையை ஒரு அன்பரும் கண்டெடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்கள் உரியவர்கள் அலுவலக நேரத்தில்வந்து பெற்றுக் கொள்ளவும்.

## இன்றைய பலன்

மாதம்—ஆவணி
திகதி—18(03-09-1984)
வாரம்—திங்கள்
திதி—அட்டமி முற் பகல் 9-10ன் மேல் நவமி
நக்ஷத்திரம்—கேட்டை இரவு 9-57 வரை

மேடம்:- மாதுருவழி ஆதரவிற்கு இடமுண்டு நண்பர்கள் உங்களை உற்சாகப்படுத்துவார்கள் புதிய முயற்சிகள் இன்றுகைகூடும்.

இடபம்:- பொதுவாக வாழ்க்கையில் நிம்மதிகிடைக்கும் வீட்டிலும் புத்திரர் மகிழ்ச்சியடைவர் தொழிலிலும் வெற்றியுண்டு சுபதினம்.

மிதுனம்:- முக்கியமான காரியங்களை இன்று பின்போடவும் உள்வீட்டிலேயே உளவு வேலை நடைபெறலாம் உசாராக இருக்கவும்.

கடகம்:- அன்பின்பிணைப்பு உங்களைப் பரவசப்படுத்தும் காதல் விவகாரம் தலைதூக்கும் சிலருக்கு பொது சனத்தலைமைக்கும் இடமுண்டு.

சிங்கம்:- ஏக்கத்தின் சாயல் தாக்கும் எதிர்பாராத வகையில் சிக்கலில் மாட்டிக்கொள்ள நேரிடும் விபத்திற்கும் இடமேற்படும் அவதானம் வேண்டும்.

கன்னி:- தந்தைவழிப்பெருமைக்கும் தாராளமாக இடமுண்டு நீண்டநாள் கனவு இன்று நனவாகும் பெரியவர்களின் ஆதரவும் உண்டு.

துலாம்:- விருந்தினர்களின் வருகை மகிழ்ச்சியைத்தரும் நீண்டநாள் பிணக்கு இன்று நிவர்த்தியாகும் நல்லநாள்.

விருச்சிகம்:- சிலருக்குப்புதிதாகத் தொழில் கிடைக்கும் சகோதரபாசம் தலைதூக்கிநிற்கும் கைத்தொழில் விருத்திக்கு இடமுண்டு.

தனுசு:- தொழில் விடயத்தில் அதிக கவனம் செலுத்தவும் நண்பர்களின் சகவாசத்தால் சிக்கல்களின் மத்தியில் மாட்டிக்கொள்ள நேரிடும் நடுநிலமை நன்று.

மகரம்:- குமுறும் நெஞ்சத்துடன் நாளைக்கடத்து வீர்கள் வாழ்க்கையில் சோர்வுக்கிடமுண்டு சிறிய விஷபயத்திற்கும் இடமுண்டு.

கும்பம்:- உடம்பை அலட்டிக் கொள்ளாமலேயே உயர்வுக்கு வழிகாண்பீர்கள் மேலிடத்து உறவு உற்சாகத்தையளிக்கும் பிதாவழிச் சுகமும் உண்டு.

மீனம்:- போட்டி விவகாரங்களில் ஈடுபடுவீர்கள் சிலருக்குப் புதிதாகவுப் தொழில் கிடைக்கும் அரசாங்க ஊழியராயின் ஆதரவிற்கு இடமுண்டு.

திருமலை
ரவீந்திரன்

## ரூபவாஹினி

### இவ்வாரத் தமிழ் நிகழ்ச்சிகள்

3 ந் திகதி திங்கட்கிழமை
மாலை
6-35 'ஊரும் உலகும்'
7-15 கலையரங்கம் கர்நாடக இசைக்கச்சேரி திரு திலகநாயகம்போல்

4 ந் திகதி செவ்வாய்கிழமை
மாலை
6-30 'அவள் ஒரு ஜீவநதி' உள்ளூர்த் தமிழ்த் திரைப்படம்

5 ந் திகதி புதன்கிழமை
மாலை
5-30 நாட்டுவளம்
6-00 'மலரும் அரும்புகள்' [சிறுவர் நிகழ்ச்சிகள்]

7 ந் திகதி வெள்ளிக்கிழமை
மாலை
6-00 விளையாட்டுப் பயிற்சி

### இன்று

மாலை
5-30 நாட்டுவளம்(சிங்களம்]
5-35 'ஹூடி ஹூட் பெக்கர்' [ஆங்கிலம்)
6-00 பௌதிகவியல் [ஆங்கிலம்]
6-20 சிறுவர் கல்வி நிகழ்ச்சி [ஆங்கிலம்]
6-35 'ஊரும் உலகும்' (தமிழ்]
6-55 செய்திகள் [தமிழ்]
7-15 'கலையரங்கம், இசை நிகழ்ச்சி - திலக நாயகம்போல்
7-45 நாடகம் [சிங்களம்1
8-15 செய்திகள் [சிங்களப் ]
8-35 [illegible]ல் நிகழ்ச்சி
9-00 'ஒலி[illegible]பிக்'-88
9-30 செய்திகள் [ஆங்கிலம்]
9-50 'பொம்பா த ஜங்கிள் போய' [ஆங்கிலம்]
10-30 உலகச் செய்திகள்
10-35 'ஜங்கிள் போய் தொடர்ச்சி
11-05 நிகழ்ச்சிகள் முடிவு


# ஹோம் பிறைன்ஸ் லிமிட்டெட்

## உல்லாச பஸ் சேவை மீண்டும் நடைபெறுகிறது!

தற்போதைய சூழ்நிலை கருதி
மாலை 6 மணிக்கு
கன்னுதிட்டி சந்தியிலிருந்து புறப்படும்.

### டிக்கட் பதிவு செய்யுமிடங்கள்

1. ஹோம் பிறைன்ஸ் லிமிட், கன்னுதிட்டி.
தொலைபேசி; 24310

2. நியூ லங்கா சேல்ஸ் சென்ரர்,
இல 6, ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23596

3. நியூ ப்ரசீதா சேல்ஸ் சென்ரர்,
இல. 337, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22480


# இரத்தப் பரிசோதனைக்கு 'சிலைட்ஸ்' இல்லையாம்!

## மலேரியா நோயாளர் பாதிப்பு

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்ட அரசினர் வைத்தியசாலைகளில் மலேரியா இரத்தப் பரிசோதனைகளுக்குப் பயன்படுத்தப்படும் கண்ணாடித் துண்டுகளுக்கு (சிலைட்ஸ்) பெருந்தட்டுப்பாடு நிலவிவருகின்றது.

இதனால் இப்பகுதியிலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் நோயாளருக்கு மலேரியா நோய் ஏற்பட்டுள்ளதா என்பதை ஊர்ஜிதப்படுத்தும் இரத்தப்பரிசோதனையை மேற்கொ[illegible]ளமுடியாது இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதிக்குத் தேவையான மேற்படி கண்ணுடித் துண்டுகளை(சிலைட்ஸ்) விரைவில் அனுப்பி வைக்குமாறு யாழ்-பிரதேச மலேரியா தடுப்பு இயக்க வைத்திய அதிகாரி மேலிடத்தைக் கேட்டுள்ளார்.

# யாழ்.பல்கலைக்கழக பரீட்சை அட்டவணை

[யாழ்ப்பாணம்]

யாழ் பல்கலைக்கழக மாணவர்களுக்கான பரீட்சை நேர அட்டவணை தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இராமநாதன் நுண்கலைக் கல்லூரி 1ம், 2ம், 3ம் ஆண்டுகளுக்கான பரீட்சைகள் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

மற்றும் முதலாம் ஆண்டு கலை, வணிகவியல், தொழில் நிர்வாகப் பரீட்சைகளும் 2ம் வருட மருத்துவபீட மீள் பரீட்சையும் இம்மாதம் 12ம் திகதி நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைகளுக்கான நேர அட்டவணை தபால் மூலம் கிடைக்காத மாணவர்களை யாழ் பல்கலைக்கழக நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு, பதிவாளர் கேட்டுள்ளார். (மா)

# நெடுங்கேணி 'கென்பாம்' கையளிக்கப்பட்டது

[வவனியா]

நெடுங்கேணியிலுள்ள ''கென்பாம்'' அனுராதபுரம் சிறைச்சாலைத் திணைக்களத்துக்கு உத்தியோக பூர்வமாகக் கையளிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை மன்னர் வீதியிலுள்ள பிராமணங்குளம் என்ற இடத்திலுள்ள மரமுந்திரிகைச் செய்கைக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட 1200 ஏக்கர் காணியைச் சில அதிகாரிகள் வவனியாவுக்கு வந்து பார்வையிட்டுச் சென்றுள்ளனர். குறித்த காணி 1200 ஏக்கரையும் காணிக்கச்சேரிமூலம் சிலருக்கு வழங்க முயற்சிநடப்பதாகக் கூறப்படுகின்றது.

செட்டிகுளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கோம்பகஸ்வெவ என்ற இடத்திலுள்ள 300 ஏக்கர் காணி இம்மாவட்டத்தைச் சேராத சிலருக்கு வழங்குவதற்குத் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

நெடுங்கேணியிலுள்ள டொலர் பாம் பகுதியிலுள்ள 200 ஏக்கர் காணியும் பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

முல்லைத்தீவிலுள்ள ஒரு பகுதியிலும், நெடுங்கேணியில் குறித்த பகுதியிலும் சுமார் 20ஆயிரம் பேர் குடியமர்த்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகக் கூறப்பட்டது.

இப்பகுதிகளில்குடியமர்த்தப்படவுள்ள அனைவரும் வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் எனத்தெரிகின்றது.

நெடுங்கேணிப் பகுதிகளில் வேறு சிலர் வந்து குடியேறியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

## பாதிப்புக்களை பார்வையிட்டனர்

(மன்னர்)

மன்னரில் அண்மையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களினால் ஏற்பட்ட பாதிப்புகளை றெட்பான இயக்கத்தைச் சேர்ந்த குழுஒன்று கடந்த சனிக்கிழமைபார்வையிட்டது.

இக்குழு மன்னர் அரசாங்க அதிபரைச் சந்தித்து உடனடியாகத் தேவைப்படும் உதவிகள் பற்றியும் கேட்டறிந்து பாதிபுற்றவர்களுக்கு பலஉதவிகளை வழங்க நடவடிக்கைமேற்கொள்வதாக தெரிவித்துள்ளது.

## பரிதாப மரணம்

(மன்னர்)

டிராக்டரை நிறுத்திவைத்துவிட்டு அதிலிருந்து மண்இறக்கிக் கொண்டிருந்த போது திடீரென டிராக்டர் பின் நோக்கிச் சென்றதால் பின்பக்கம் நின்று கொண்டிருந்த 22 வயதுடைய இளைஞர் ஒருவர் டிராக்டர் சில்லினுள் நசியுண்டு பலியானர்

மன்னர் ஆத்திமோட்டை கிராமத்தைச் சேர்ந்த வி. தர்மகுலசிங்கம் என்பவரே இவ்வாறு மரணமானவராவர்

இவரது மரணம் தொடர்பாக மரணவிசாரணை நடத்திய மரணவிசாரணை அதிகாரி எஸ். தர்மலிங்கம் தற்செயல் விபத்து மரணமென தீர்ப்பளித்தார்.

## அங்குரார்ப்பணக் கூட்டம்

[சாவகச்சேரி]

நாவற்குளிப் பகுதியில் தற்போது தங்கியிருக்கும் இடம் பெயர்ந்த அகதிகளின் அங்குரார்ப்பணக் கூட்டம் நாவற்குளி நெசவு நிலையக் கட்டடத்தில் கிராமோதய சபைத் தலைவர் திரு. பொ. சுப்பையா தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் அறவழிப் போராட்டக்குழு இயக்குனர்கள் திரு. வீ.எஸ். துரைராசா க. ஜீவகதாஸ் ஆகியோரும், குடிபெயர்ந்தோர் நலன் அபிவிருத்திப் பேரவைச் செயலாளர் திரு. ஆ. இராசலிங்கமும் பங்கு கொண்டு, இடம் பெயர்ந்த அகதிகளின் பிரச்னை பற்றி விரிவாக ஆராய்ந்தனர்.

இக் கூட்டத்தில் பங்கு கொண்ட அகதிகள், நாவற்குளி இடம்பெயர்ந்தோர் சங்கம் எனும் பெயரில் புதிய அமைப்பினை உருவாக்கியுள்ளனர். இதன் நிர்வாகிகளாகப் பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்:- எஸ். செல்வராசா
செயலாளர்;-ஏ. சி. கந்தசாமி
பொருளாளர்:- நீ. பாலகிருஷ்ணன் மற்றும் ஐவர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

# வீடமைப்புக் கடனைச் செலுத்த முடியாத நிலை!

(கொழும்புத்துறை)

வீடமைப்புக்காகப் பெற்ற கடன் பணத்தை மீளச்செலுத்துவதற்காகத் தேசியவீடமைப்புத் திணைக்களத்திற்குச் செல்லுபவர்கள் பணத்தைச் செலுத்த முடியாது திரும்ப வேண்டியுள்ளது.

வங்கிகளில் பணத்தைச் செலுத்த முடியாமலும், காசோலைகளை வைப்பிலிட முடியாமலும் இருப்பதைத் தொடர்ந்தே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

வீடுகள் கட்டுவதற்காகவும், திருத்துவதற்காகவும் தேசிய வீடமைப்புத் திணைக்களம் கடன்களை வழங்கயிருந்தது. இக்கடன்களை அறவிடுவதில் வீடமைப்புத் திணைக்களம் கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்ததுடன் உரிய காலத்தில் கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறியவர்கள் மீது சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வந்தது.

தற்போது யாழ் மாவட்டத்தில் வங்கிகள் இயங்காததினால் கடனை மீளச் செலுத்த வருபவர்களைத் திருப்பியனுப்ப வேண்டிய நிர்ப்பந்த நிலை தேசிய வீடமைப்புத் திணைக்களத்திற்கு ஏற்பட்டுள்ளதாம்.

## மெய்வல்லுநர் போட்டி

(அரியாலை)

''நாற்கோண மெய்வல்லுநர் போட்டி யாழ்ப்பாணக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இம் மாதம்10ம், 11ம் திகதிகளில் நடை பெறவுள்ளது.

இந்தப் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி யாழ். பரி.யோவான் கல்லூரி யாழ்.சென்பற்றிக்ஸ் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆகிய வற்றைச் சேர்ந்த 16,17,19 வயதுப் பிரிவு மாணவர்கள் கலந்து கொள்ள விருக்கின்றனர்.

## தும்பு உற்பத்தியை ஊக்குவிக்க நடவடிக்கை

(புலோலி)

வட மராட்சி கிழக்கின் பின் தங்கிய கிராமங்களான குடத்தனை, அம்பன், நாகர்கோவில் பகுதிகளில் குடிசைக் கைத்தொழில் முறையில் சுமார் 50 கும்பங்களைத் தும்புஉற்பத்தித்துறையில் ஊக்க மளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படவுள்ளன

புலோலி பருத்தித்துறை ஏற்றுமதி உற்பத்தி கிராம கம்பனியே இந் நடவடிக்கையை மேற் கொள்ளவுள்ளது.

**Shanthi** (JAFFNA)
Daily 10-30, 2-30 and 4-45
MOVING VIOLATION
(Color
(Action Thrilling Suspense)

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,6-30
சிவாஜி - சரோஜாதேவி
**என் தம்பி**

**மனோகரா** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15,
ரவிச்சந்திரன் ராஜஸ்ரீ
**உத்தரவின்றி உள்ளே வா**

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,6-30
எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா
**என் அண்ணன்**

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவகுமார் - சுஜாதா
**அன்னக்கிளி**
(புத்தம் புதிய பிரதி-கலர்)

**றீகல்** [யாழ் நகர்]
10-30, 2-15, 4-30
Robert Shaw...
FORCE 10 FROM NAVARONE
(War Film)

**வின்சர்** (யாழ். நகர்)
தினசரி 10-30. 2-30, 6-15
எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா நம்பியார்
**அன்னமிட்டகை**
[புதிய பிரதி]

குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்
**ராஜா** (யாழ் நகர்)
தினசரி 10-30. 2-00,6-00
சிவாஜி-கிரிஜா
கண்ணம்மா
**மனோகரா**
(புதிய பிரதி)

**லிடோ** யாழ் நகர்
தினசரி 10-30,, 2-30 6-30,
ஜெய்சங்கர்
**நீ ஒரு மகராணி**

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எஸ்.எஸ்.ஆர்- விஜயகுமாரி
**நீங்காத நினைவு**
[புதிய பிரதி]

ஆழிக்குமரன் ஆனந்தன் மறைவு

## தமிழினத்திற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்

(யாழ்ப்பாணம்)

நெஞ்சில் உறுதியும், சிந்தையில் தெளிவும், விடாமுயற்சியும், முறையான பயிற்சியும் இருந்தால் ஒருவனால் எதையும் சாதிக்கமுடியும் என்பதற்கு ஆழிக்குமரன் ஆனந்தனின் வாழ்க்கை வரலாறு. இளைய தலைமுறைக்கு நல்லதொரு எடுத்துக்காட்டு. சிறுவயதில் 'போலியோ' வியாதியால் பீடிக்கப்பட்டு ஏழுவயது மட்டும் சரியாகத்தானும் நடக்க முடியாதிருந்த ஆனந்தன், தன் அயராஉழைப்பினால், ஒன்றன்பின் ஒன்றாக சாதனைகளைப் புரிந்து 'கின்னஸ்' உலக சாதனை புத்தகத்தில் ஏழு தடவைகள் தனது பெயரை இடம்பெறச்செய்து ஈழத்தமிழரின் புகழை உலக அரங்கில் நிலைநாட்டினார்.

ஈச்சமோட்டையில் நடைபெற்ற ஆழிக்குமரன் ஆனந்தனின் அஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றிய முன்னைநாள் அகில இலங்கை உதைபந்தாட்ட வீரர் கப்ரின் டி. ஏ. எம். குணசிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

ஈச்சமோட்டை இளைஞர் விளையாட்டுக் கழகத்தினரால் ஒழுங்குசெய்யப்பட்டு அண்ணமலை விளையாட்டரங்கில் நடைபெற்ற இந்தஅஞ்சலிக் கூட்டத்திற்கு அண்ணாவியார் எஸ். செபஸ்தியாம்பிள்ளை தலைமை தாங்கினார்.

கப்ரின் குணசிங்கம் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

சகல கலா வல்லபனாய் திகழ்ந்த ஆனந்தன் தனது உலகசாதனைகளை பெரிதாக எண்ணி இறுமாப்படையவில்லை. மேலும் மேலும் சாதனைகள் பல புரியவேண்டும் என்ற தாகம், இடர்கள் பல ஏற்பட்டபொழுதிலும், இறுதிமூச்சுவரை சிறிது அளவேனும் தணியவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக ஜாதி மத பேதம் பாராமல் சாதனை வீரர்களை உருவாக்குவதில் தன்னால் இயன்ற உதவியும் ஊக்கமும் அளித்தார். ஆனந்தனின் மறைவு விளையாட்டு உலகிற்கும் இலங்கைக்கும் விசேடமாய் தமிழ் இனத்திற்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.

திரு. நடராசா யெனகன், திரு. ஏ ஆர் ரூபசிங்கம், திரு. ஏ பொன்னுக்கோன், திரு, சி. ஜே. அல்பிறட், உதவி அரசாங்க அதிபர் திரு ஏ. தொம்மைப்பிள்ளை உட்பட பலர் உரையாற்றினார்கள். (க)

## ஆராதனை

(அரியாலை)

அருட் சகோதரர் பி. ஜே. சூரியகுமாரை கிரான் ஆச்சிரம சேவக்காகத் திருநிலைப்படுத்தும் ஆராதனை மட்டுநகர் கிரான் ஆச்சிரமத்தில் இம் மாதம் 8ம் திகதி நடைபெறவுள்ளது.

திருநிலைப்படுத்தும் ஆராதனையை சுன்னாகம் கிறிஸ்தவ சேவ ஆச்சிரம பிரதம சேவக் அருட் திரு. சாம். அல்பிரட் அடிகளார் ஒப்புக்கொடுத்து அருளுரை நிகழ்த்துவார்.

## தேவாலயத் திறப்பு விழா

(அரியாலை)

தென்னிந்தியதிருச்சபையின் யாழ்ப்பாண அத்தியட்சாதீனத்தினால் உடுவில் சத்தியபுரக் கிராமத்தில் கட்டிமுடிக்கப்பட்ட கிறிஸ்தவ தேவாலயத்தை பேராயர் பேரருட் திரு. டி ஜே. அம்பலவாணர் ஆண்டகை இம்மாத நடுப் பகுதியில் திறந்து வைக்கவிருக்கிறார்.

தென்னிந்தியதிருச்சபையின் சுவிசேஷ சபையின் பொறுப்பாளர் அருட்திரு. எஸ். மனோபவன் அடிகளார் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

## வெற்றிடங்கள்

யாழ்ப்பாணத்தில் முன்னணி வகிக்கும்
ஓர் தொழில் ஸ்தாபனத்திற்கு
கீழ்வரும் வெற்றிடங்களுக்கு
உடனடியாக ஆட்கள் தேவை,

I PRODUCTION FOREMAN
(a) ஆகக்குறைந்தது G. C. E. O/L வரை படித்திருக்கவேண்டும்.
(b) குறைந்தது ஐந்து வருட WORK SHOP அல்லது INDUSTRIAL அனுபவம் இருத்தல் வேண்டும்.
(C) வயது 25—35க்குமிடைப்பட்டவராயிருத்தல் வேண்டும்-
(D) SHIFT வேலை செய்யவேண்டும்.

II KNITTING MANAGER
KNITTING and FNIISHINGல்ஆகக்குறைந்தது பத்துவருடங்கள் அனுபவமுள்ள KNITTING MANAGER தேவை

III BOOK-KEEPER
(a) I A A அல்லது அதற்குச்சமமான பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
(b) ஆகக்குறைந்தது மூன்று வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.
(C) வயது 20—25க்குமிடைப்பட்டவராயிருத்தல் வேண்டும்.

அனுபவத்திற்கும் திறமைக்குமேற்ப சம்பளம் வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி 10-9-84

விளம்பர இல. 1508, C/o ஈழநாடு.

(1508)

## அரிய சந்தர்ப்பம்

★ COMPUTER PROGRAMMING (BASIC, COBOL)
கூடிய நேர செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.
★ ரெலிவிஷன், வீடியோ டெக் றிப்பியறிங்
ஆரம்பத்தில் இருந்து இரண்டுமாத முழுநேர செய்முறைப் பயிற்சியுட்பட பயிற்சியளிக்கப்படும்.
★ எலக்ரிக்கல் வயறிங் ★ எலக்ரிக்கல் வெல்டிங்
இரண்டு மாத செய்முறைப் பயிற்சியுட்பட பயிற்சியளிக்கப்படும்.
★ மோட்டார் றீவைண்டிங்
சகல வித மின்சாரப் பொருட்கள் றீவைண்டிங் செய்யப்படும் முறை பயிற்சி அளிக்கப்படும்.
★ எயர் கொண்டிசனிங்
★ HOTEL MANAGEMENT, FRENCH

பயிற்சிகள் ஆரம்பம் 05-09-1984

குறிப்பு: சனசமூக நிலையங்களினூடாகப் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு சலுகை கட்டணங்களில் பயிற்சியளிக்கப்படும். விபரங்களுக்கு நேரில் அல்லது உமது சனசமூக நிலையங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

JAFFNA TECHNICAL INSTITUTE
ஸ்ரான்லி வீதி, (றெயில்வே கடவையருகாமை) யாழ்ப்பாணம்

## யாழ்ப்பாணத்தில் ரெலிவிஷன் மாளிகை

★ பிலிப்ஸ் ரெலிவிஷன்

கலர் – கறுப்பு – வெள்ளை (சகல அளவுகளில்)
★ எலைற், கோல்ஸ்ரார், சொனி, சன்யோ
ரெலிவிஷன்கள்
★ அன்ரனா, பூஸ்டர், வயர்
மற்றும்
உப உறுப்புக்கள் சகலதும் பெறலாம்.
அன்ரனா அமைப்பதில் முன்னோடிகள்

நியு சிற்றி றேடர்ஸ்

135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 24055

வாங்கும் ரெலிவிஷன்களுக்கு அன்ரனா, வயர் பூஸ்டர் இனும் முந்துங்கள்.

# அமைச்சர் சோமசுந்தரம்

## அ. தி. மு. க விலிருந்து வெளியேற்றம்

### ஜெயலலிதாவின் பதவிவிலகல் கடிதமும் ஏற்கப்பட்டது

சென்னை, செப். 2 தமிழ்நாடு மாநில உணவு அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அ. தி. மு. க விலிருந்தும், அமைச்சரவையிலிருந்தும் நேற்று வெளியேற்றப்பட்டுள்ளார்.

இத்தகவலை அ. தி. மு. க. வின் பொதுச்செயலாளர் திரு. ப. சண்முகம் நேற்றுப்பகல் நிருபர்களிடம் தெரிவித்தார்.

அ. தி. மு. க. வின் கொள்கை பிரசாரச் செயலாளர் பதவியிலிருந்து விலகும் செல்வி ஜெயலலிதாவின் இராஜினாமாக்கடிதமும் ஏற்கப்பட்டதாக திரு. சண்முகம் நிருபர்களிடம்தெரிவித்தார்.

செல்வி ஜெயலலிதா முன்னரே தமது ராஜினாமா கடிதத்தை சமர்ப்பித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## இன்று தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் ஐக்கிய வியாபாரச் சங்கக் கட்டட இடிபாடுகளுக்குள் கண்டெடுக்கப்பட்ட எலும்புத்துண்டுகள் தொடர்பான விசாரணையில் யாழ். நீதவான் எஸ். நாகராசா இன்று தீர்ப்பு வழங்குவார். (க)

### ஜீப் கடத்தப்பட்டது...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மான ஜீப்பொன்று இளைஞர்களால் கடத்திச்செல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. (க)

## கூட்டணி செயற் குழு

[யாழ்ப்பாணம்]

தமிழர் விடுதலைக் கூட்டணி செயற்குழு கூடும் தேதிபற்றி இன்னும் முடிவு செய்யப்படவில்லையென்றும், கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு அ. அமிர்தலிங்கம் இன்று யாழ்ப்பாணம் வருவாரென்றும், அதன்பின்னரே திகதி முடிவு செய்யப்படுமென்றும் கூட்டணி நிர்வாகச் செயலாளர் திரு. எம். ஆலாலசுந்தரம் நேற்றுத் தெரிவித்தார்.

# இப்படியும் நடக்கிறது

சவூதி அரேபியா தொலைக்காட்சிச் சேவையில் வல்வெட்டித்துறையில் தீக்கிரையான இடங்கள் ஒளிபரப்பப்பட்டிருக்கிறது!

கடந்த 19-ம் திகதி ஒளிபரப்பான சவூதி அரேபியாவின் தொலைக்காட்சிச் சேவை செய்தி ஒளிபரப்பில் இது இடம் பெற்றதாக நமது வாசகர் ஒருவர் சவூதி அரேபியா, டமாமிலிருந்து அறிவிக்கின்றார்.

பிரஸ்தாப செய்தி ஒளிபரப்பில், வல்வெட்டித்துறைப் பகுதியில் தீக்கிரையான கடைகள், வீடுகள் என்பனவும் சுவரொன்றில் ஒட்டப்பட்டிருந்த தடைசெய்யப்பட்ட இயக்கம் ஒன்றின் சுவரொட்டி ஒன்றும் காண்பிக்கப்பட்டதாம்.

பாதிப்புக்குள்ளான வல்வெட்டித்துறை மக்களுடன் முன்னாள் வல்வை நகரசபைத் தலைவர் ஒருவரும் காணப்படுவதுப் செய்தி ஒளிபரப்பில் இடம்பெற்றது.

சவூதி அரேபியா தொலைக்காட்சி சேவை இலங்கையில் நடக்கும் முக்கிய சம்பவங்களை தொடர்ச்சியாக ஒளிபரப்பு செய்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது என்றும்நமது வாசகர் அறிவிக்கின்றார்.

— ஊருடுவி

## ரூ. 10,000 கொள்ளை:

### சித்தன்கேணியில் சம்பவம்

(சித்தங்கேணி)

சிந்தங்கேணியிலுள்ள வீடொன்றினுள் நள்ளிரவு வேளையில் புகுந்த இனந் தெரியாத நபர்களினால் சுமார் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான மணிக்கூடு சேலைகள் மற்றும் துணிவகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

சித்தன்கேணி சிவன் கோவிலுக்கு அருகாமையிலுள்ள வீடொன்றினுள் நள்ளிரவு வேளை வீட்டுயன்னல் கம்பிகளை வளைத்து உட்சென்ற நபர்கள் வீட்டுக்குள் சுமார் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான மணிக்கூடு, சேலைகள் துணிவகைகளைக் கொள்ளையடித்துச் சென்றனர்.

வீட்டுக்காரர்கள் அடுத்த நாட்காலை நித்திரைவிட்டெழுந்த போது வீட்டுயன்னல் கம்பிகள் வளைக்கப்பட்டிருந்தமை கண்டு ஆச்சரியமடைந்தனர்.

### ராணுவவீரர்களுக்கு...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

தாகவும் விசாரணையில் குற்றவாளிகளாகக் காணப்படுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்'' என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

### சட்டத்தரணிகள்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இன்றுமுதல் ஒருவார காலத்திற்கு சட்டத்தரணிகள் பகிஷ்கரிக்க முடிவு செய்துள்ளது தெரிந்ததே.

பருத்தித்துறை நீதிமன்றத்தைப்ப பகிஷ்கரிப்பது பற்றி இன்று சட்டத்தரணிகள் கூடி முடிவு செய்வார்கள் எனக் கூறப்படுகிறது (க)

## யாழ். தேசிய சேமிப்பு வங்கியில் வட்டிபெற வந்தவர்கள் ஏமாற்றம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரிலுள்ள தேசிய சேமிப்பு வங்கிக்கு மாதாந்த வட்டியைப் பெற வந்தவர்கள், வங்கியில் வேலை நடைபெறாததினால் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்,

வங்கியில் சாமான்கள் ஒன்றுமில்லை என்றும், வங்கியைத் திருத்தி கணக்குகள் சரிபார்த்து மீண்டும் ஆரம்பிக்க சுமார் ஒருமாதகாலம் செல்லும் என்றும் வங்கி வட்டாரங்சள் தெரிவித்தன.

வங்கியில் மாதாந்த வட்டி பெறுபவர்களுக்கு எல்லாமாகச் சேர்த்து வங்கி இயங்க ஆரம்பித்ததும் வழங்கப்படும் என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (க)

# மரண அறிவித்தல்

## நாச்சிமார்கோவிலடி

## கா. விசுவநாதர் பத்தர்

நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த கா. விசுவநாதர் பத்தர் காலமானார். இவர் பூமணியின் அன்புக்கணவரும், குகநாதன் (ஆசிரியர் தாண்டிக்குளம் வவனியா), பத்மநாதன், கதிர்காமநாதன், சரோஜினிதேவி, கைலாயநாதன் (ஆட்டிஸ்ட்) ஆகியோரின் தந்தையாரும், அமிர்தவல்லி, சந்திரிகா ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 3-9-84 (இன்று) திங்கட்கிழமை 3 மணியளவில் வண்ணார் பண்ணை மேற்கு பத்திரகாளி கோவிலடி இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு கோம்பையன்மணல் மயானத்தில் தகனம்செய்யப்படும். 1587

### பாதிக்கப்பட்ட

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பற்றிய விபரங்களையும் அறிந்து கொண்டார்.

பாதிக்கப்பட்டவர்கள் பலியானவர்கள், காயமடைந்தவர்கள் பற்றிய விபரங்களை சமர்ப்பிக்குமாறு அரசாங்க அதிபர் திரு. பஞ்சலிங்கம், பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வேலும்மயிலைக் கேட்டுள்ளார். (க)

### 18-பேர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. அமிர்தலிங்கத்தின்கூற்றுக் குறித்துக் கருத்துத் தெரிவித்த அமைச்சர்; இச்செய்திடை வெளியிட்டபோது திரு. அமிர்தலிங்கம் கொழும்பில் தான் இருந்துள்ளார் என்றும், இதனால் அவரின் கூற்றினையும் சரியானதாக ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் தெரிவித்தார்.

இச்சம்பவத்தில் பல கடைகளும், தனியார் வீடுகளும் எரிக்கப்பட்டுள்ளதாக அரசுக்குத் தகவல் வந்திருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

### திக்கம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னர்.

பருத்தித்துறையில் நடைபெற்ற பொலிஸ் அத்துமீறல் சம்பவங்களை நேரில் பார்வையிடுவதற்காக பொலிஸ்மா அதிபர் உருத்திரா ராஜசிங்கம் அங்கு சென்றுள்ளார் என்றும் அவரின்அறிக்கைகிடைத்ததும் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி தெரிவித்துள்ளார்

# மரண அறிவித்தல்

## திருமதி சு. மகேஸ்வரி

ஆறுகால்மடம் ஆனைகோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், மானிப்பாய்-நல்லூர் வாசியும், மானிப்பாய்ச் சந்தையடியைச்சேர்ந்தவரும், இளைப்பாறிய இ. போ. ச. யாழ், சாலைப் பரிசோதகர் திரு. K. சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவி மகேஸ்வரி அவர்கள் 1-9-84 இரவு, 18/3, செட்டித்தெரு நல்லூர் அவரது இல்லத்தில் காலமானார். இவர் மானிப்பாய் இந்துக்கல்லூரி பழைய மாணவர்கள் S. ஸ்ரீகோணேஸ்வரன் (சவுதி), S மகேஸ்வரன் (இத்தாலி), கோப்பாய் கிறிஸ்ரியன் கல்லூரி மாணவன். S. ஞானேஸ்வான் (சுவிற்சர்லாந்து), யாழ். வேம்படி மகளிர் கல்லூரி பழைய மாணவி செல்வி மஞ்சுளா-மனோகரி, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மறவாத அருமைத்தாயரும், திரு. V. கணேசன் (நீர்ப்பாசன இலாகா கந்தளாய்), செல்லம்மா, அன்னலெட்சுமி ஆகியோரின் அருமைச் சகோதரியும், முன்னைநாள் N. O B பஸ் கொம்பனி பங்காளர்களாகிய காலஞ்சென்ற திரு, A. சிவலிங்கம், கைலாசபிள்ளையார் கோவிலடி திரு A. மாணிக்கம், திரு S. சுப்பிரமணியம் (தேநீர்க்கடை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் இலக்கம் 69, ஆனைப்பந்தியடி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற கனகசபை நாகரத்தினம் அவர்களினது அன்பு மருமகளுமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று திங்கட்கிழமை (3-9-84) நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று செம்மணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றேன்.

கனகசபை சுப்பிரமணியம், 18/3 செட்டித்தெரு,
நல்லூர். யாழ்ப்பாணம். 1586

### 21-ல் கூடும்போது...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டதாக அமைச்சர் தெரிவித்தார்.

மாநாட்டில் தற்போது குறிப்பிடக்கூடிய முன்னேற்றம் காணப்படுகிறது'' என்றும் அமைச்சர் வெளியிட்டார்.

மாநாடு 21-ம் திகதி கூடி, பின்னர் மீண்டும் 30-ல் தொடர்ந்து கூடும்.

### 'அமர்' கூற்று ..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

துக்கட்ட முனைந்துகொண்டிருக்கும் வெளிநாடொன்றின் பிரஜையா?'' என்று நிதி அமைச்சர் திரு ரொனி டிமெல் கேள்வி எழுப்பினார்.

வென்னப்புவாவில் புதிய மக்கள் வங்கிக்கிளை ஒன்றை நேற்றுத் திறந்துவைத்து உரையாற்றுகையில் அமைச்சர் இவ்வாறு கேட்டார்.

''இலங்கையில் தமிழர்களுக்கு இன்னல்கள் இழைக்கப்படுவதாகக் குறிப்பிட்டு வெளிநாட்டு உதவி வழங்கப்படுவதனை தடுப்பதற்கு த வி கூட்டணி முன்னாள் எம் பிக்கள் பலர் பிரசாரம் செய்து வருகின்றார்கள் ஆனாலும் திரு அமிர்தலிங்கம் போன்ற திறமை வாய்ந்த தலைவர் ஒருவர் இவ்வாறான அறிக்கையை வெளியிடுவார் என்று நான் சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை

இந்த அறிக்கை உண்மையானது அல்ல என்று தற்போதும் தான் நம்புகின்றேன்' என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

### பதற்றம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர் இவர்கள்இருவரும் பின்னர் அங்கிருந்து யாழ், அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறையில் பலகடைகள் தீக்கிரையாகின, சில கடைகள் தீயிடப்பட்ட போது உடனடியாக அணைக்கப்பட்டு விட்டதாகக் கூறப்படுகிறது. பல வீடுகளும் தீக்கிரையாகின.

பருத்தித்துறை நகரப்பகுதியில் பதற்ற நிலை நீடிக்கிறது. பருத்தித்துறைக்குச் செல்லும் சகல வாகனங்களும் பலத்த சோதனைக்குட்படுத்தப்பட்டு வருகிறது.

மக்கள் அச்சத்துடன் இருந்து வருவதாகவும், வீதிகள் ஜன நடமாட்டமில்லாது வெறிச்சோடிக் கிடப்பதாகவும் தகவல்கள் தெரிவித்தன

கடைகள் யாவும் பூட்டப்பட்டுள்ளன வீதிகளில் மக்களைக் காணமுடியவில்லை எங்கும் மயான அமைதி பருத்தித்துறையிலிருந்து மற்றப் பகுதிகளுக்கான தொலைபேசி இணைப்புத் துண்டிக்கப்பட்டு விட்டதாகக் கூறப்படுகிற! (க)

## பயிற்சி

(சித்தன்கேணி)

பனம் பொருள் உற்பத்தி பயிற்சி வகுப்பைசித்தன்கேணி மாதர் முன்னேற்றச் சங்க மண்டபத்தில் இன்று காலை வலி மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு து வைத்திலிங்கம் ஆரம்பித்து வைத்தார்

பனம் பொருள் அபிவிருத்திச் சபையும், வலி மேற்கு உதவிஅரசாங்கஅதிபர் பிரிவும் இணைந்து இப் பயிற்சிவகுப்பை நடாத்துகின்றன.

இப் பயிற்சியைபயில்வதற்கு வலி மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து சுமார் 40 யுவதிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள்.

## வேலைத் திட்டங்கள் தயாரிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபையின் 1984ம் ஆண்டுக்கான வேலைத்திட்டங்கள் தயாரிக்கப் பட்டுள்ளன.

இவ்வேலைத் திட்டங்களில் வீதிகள் ,அமைத்தல், டனரமைத்தல், கிராமப் புறங்களில் குடிநீர்க் கிணறுகளைத் தோண்டுதல் ஆகிய வற்றுக்கே முதலிடம் வழங்கப்பட்டுள்ளது.

இத்துடன் தையல் பயிற்சி நிலையங்கள், விளையாட்டு மைதானங்கள் ஆயுள் வேத வைத்தியசாலைகள் அமைத்தல் ஆகிய வேலைத்திட்டங்களும் சேர்க்கப்பட்டுள்ளன

இவ் வேலைத்திட்டங்களுக்குத் தேவையான பணத்தை பாராளுமன்ற உறுப்பினருக்கான நிதி, விசேட நிதி, ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டநிதி ஆகிய வற்றிலிருந்து வழங்கப்படும்.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81. Eelanadu P. o. Box 49, Telegram Eelanadu, Telephone: 22389 — 24126.